விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 11 சனிக்கிழமை (26.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 007

## மீசாலையில் குடும்பஸ்தர் குத்திப் படுகொலை

### நத்தார் தினமன்று நடுவீதியில் பயங்கரம்



(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் மீசாலை, தட்டான்குளம் வீதியில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் குத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

நத்தார் பண்டிகையான நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 19

### சுகாதார நடைமுறைகளுடன்

## சுனாமி நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்த அனுமதி

(யாழ்ப்பாணம்)

சுனாமி நினைவேந்தல் நிகழ்வுகளை சுகாதார நடைமுறைகளை 19

## உடுவிலில் ஒருவருக்கு கொரோனா உறுதி

### மருதனார்மடம் கொத்தணி 105 ஆக உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் 19

## வவுனியாவில் பெண் ஒருவருக்கு கொரோனா

(வவுனியா)


வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 60 வயதான பெண் ஒருவருக்கு 19




### ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான

# புதிய பிரேரணைக்கு முடிவு கட்டப்படும்

## ஜனாதிபதி கோட்டா உறுதி



(கொழும்பு)

ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள புதிய பிரேரணைக்கு முடிவு கட்டப்பட்டு அப்பிரேரணை வலுவிழக்கச் செய்யப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் மார்ச்சில் ஜெனிவாவில் 19

## குளத்தில் மூழ்கிய இளம் குடும்பஸ்தர் மரணம்

### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கல்மடுகுளத்திற்குள் மூழ்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நண்பர்கள் அடங்க 19

## நாட்டில் கோவிட்-19க்கு மேலும் ஒருவர் மரணம்

### நேற்றும் +551 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் கோவிட் - 19 நோயால் அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு அறிவித்துள்ளது.

இதன்மூலம் நாட் 19

## கனடா செல்ல முயன்ற யாழ்.யுவதி கட்டுநாயக்கவில் கைது

(யாழ்ப்பாணம்)

போலியான கனேடிய கடவுச் 19

## வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் தேர்தலில் வாக்களிக்க ஏற்பாடு

### புதிய நடைமுறைக்கு அரசும் இணங்கியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அத்தியாவசிய கடமையில் ஈடுபடுவோர், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு தேர்தல் தினத்திற்கு முன்னரே வாக்களிக்கும் உரிமையை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சி 19

### கிளிநொச்சியிலிருந்து யாழுக்கு

## உலர் உணவு உதவி வழங்க வந்தவருக்கு கொரோனா

### 30 குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியிலிருந்து யாழ். நாவாந்துறைக்கு உலர் உணவு உதவி வழங்க வந்த நபருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் நாவாந்துறையில் 30 குடும்பங்கள் தனிமைப்படுத் 19

## அனலைதீவில் ஆயுதமுனைக் கொள்ளை

அனலைதீவில் பெண் தலைமைத்துவக் குடும்பம் வசிக்கும் வீடு ஒன்றுக்குள் நுழைந்த மூவர் அடங்கிய திருட்டுக் கும்பல் ஆயுத முனையில் தங்க நகைகளை கொள்ளையிட்டு சென்றுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரின் துணையுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருட்டு நடவடிக்கையின் சூத்திரதாரி அனலைதீவைச் சேர்ந்தவர் என்றும் ஏனைய இருவரும் வேலணை உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ம-03)

## புதிய கொத்தணி

விதிமுறைகளை மீறியமைக்காக, கேகாலை ஆயுர்வேத மருத்துவர் தம்மிக பண்டாரவுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படலாம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணரட்ண தெரிவித்துள்ளார்.

மருந்தினை பெறுவதற்காக பெருமளவு மக்கள் வைத்தியரின் வீட்டின் முன்னால் காணப்பட்டமை இது இரண்டாவது தடவை எனவும் இதுவொரு புதிய கொத்தணியாக உருவாகும் ஆபத்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (ம-03)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 21.06.1956
அழிப்பு 26.12.2010

அமரர்
### திரு. மார்க்கண்டு சிவலிங்கம்
(B.Sc Agri., Post Graduate Dip. In Edu., SLEAS - II)
(முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம், மருதனார் மடம்)

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20.03.1937
மறைவு 20.08.2011

அமரர்
### திருமதி. மா. பரிமளம்

எம் குலத்தில் தோன்றிய முத்தான முதல்வனே,
ஞாலத்தில் செம்மையாய் வாழ்ந்த உத்தமனே
காலத்தால் அழியாத நம் கலங்கரை விளக்கே
ஈரைந்து ஆண்டுகள் ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்.
ஆறுதலின்றி தவிக்குதையா எம் நெஞ்சம்
அமைதியாய் துயிலும் உங்கள்
ஆன்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகிறோம்.

(5050)

உரும்பிராய் மேற்கு, மூன்று கோயிலடி. குடும்பத்தினர்.


## நல்லூர் பாம் சென்ரர்

வாடிக்கையாளர்களின் ஆதரவுடன் **38 ஆவது வருடத்தில் கால் பதிக்கும் நல்லூர் பாம் சென்ரர்.**
புறோயிலர், கல்பேட், ஊர்கோழி, (Parents)
காலை 7.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரை சுகாதார முறைப்படி சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். வாடிக்கையாளர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(5053)

நல்லூர் பாம் சென்ரர்
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.


## கண்ணீர் அஞ்சலி




எமது கல்லூரியின் சங்கீத பாட ஆசிரியை
திருமதி சாந்தினி கிருபாகரன் அவர்களின் அன்புத் தாயார்
அமரர் **சின்னம்மா கந்தசாமி**
அவர்களின் மறைவினையொட்டி மிகுந்த கவலையும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் நலன்புரிச் சங்கம்
யா / இணுவில் மத்திய கல்லூரி
(5062)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 26.11.2020 வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்த
அமரர்
### செல்லர் சின்னராசா

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.12.2020) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-1021)

சிங்கைநகர், தென்லோலி,
பருத்தித்துறை.
குடும்பத்தினர்

## 16 ஆம் ஆண்டு நினைவலை



### இராசரத்தினம் சகிதன்

தோற்றம் 28.03.2004
மறைவு 26.12.2004

ஆழியவன் உனை காவு கொண்டு
ஆனதுவோ ஆண்டு பதினாறு
ஆனாலும் ஆறவில்லையடா எம்மனம்
ஆறடி ஆண்மகனாய் எம்மை
ஆழ்வாய் என நாம் கண்ட கனவு
ஆனதுவோ கானல் நீராய் இன்று
ஆண்டவனுக்கும் உன்மீது தீரா அன்போ
அதனால்தான் உன்னை
அணைத்துக் கொண்டானோ
ஆண்டு பதினாறு அல்ல ஆயிரம் ஆனாலும்
நீங்காதடா உன் நினைவு எம் முத்தே...

(C-1023)

செல்லையா பல்பொருள் வாணிபம்
(செல்வன்)
முல்லைத்தீவு
077 945 9941

இவ்வண்ணம்
அப்பா, அம்மா,
தம்பிமார்

# திருகோணமலை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும்

(திருமலை)

திருகோணமலை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டு, அப்பகுதியின் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்படும் என துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.




திருகோணமலை துறைமுகத்தில் 1.5 கிலோ மீற்றர் புகையிரத பாதை அமைத்தல் மற்றும் அஷ்ரப் துறைமுக விரிவாக்கம் மற்றும் மேம்பாடு தொடர்பில் துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன நேற்று முன்தினம் திருகோணமலை துறைமுகத்துக்கு விஜயம் மேற்கொண்டார். இதன்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான பயன்படுத்தப்படாத நிலங்களைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் ஒரு தொழிற்றுறைபேட்டையை கட்டுவதற்கும், தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் ஒரு பயனுள்ள வளர்ச்சித் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் இதன்போது திருகோணமலை துறைமுக பசுமை புரட்சியை வலுப்படுத்துவதற்காக திருகோணமலை துறைமுக வளாகத்தில் மரக்கன்றும் நடப்பட்டது. (ஜ-4)

# ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதை கண்டித்து யாழில் முஸ்லிம் மக்கள் போராட்டம்



(குப்பிழான்)

நாட்டில் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதைக் கண்டித்து யாழ்.முஸ்லிம் மக்களினால் சோனகதெரு ஐந்து சந்தி பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் கே.சுகாஸ், யாழ்ப்பாணம் பள்ளிவாசல் நிர்வாகிகள், உலமாக்கள், அரசியல் பிரதிநிதிகள், முஸ்லிம் வர்த்தகர்கள், முஸ்லிம் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-4-5-18)

# ஜனவரி 11 இல் புதிய பாடப் புத்தகங்கள் வழங்க ஏற்பாடு-கல்வியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை கல்வி நடவடிக்கைகளின் புதிய தவணை 2021 ஜனவரி 11 ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.




தரம் ஒன்று முதல் 5 வரையான வகுப்புக்கள் அன்றைய தினம் முதல் ஆரம்பிக்கப்படும். இதற்கான பாடப்புத்தகங்களை மாணவர்களுக்கு வழங்குமாறு அதிபர்கள் உட்பட அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் மேல் மாகாணத்தில் கொழும்பு கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளும் குறித்த தினத்தில் ஆரம்பிக்கப்படமாட்டாது.

இந்த வருடத்திற்குரிய பாடவிதானங்களை நிறைவு செய்யாத பாடசாலைகள் இருக்குமாயின் அடுத்த வருடத்தின் முதல் இரண்டு மாத காலப்பகுதிக்குள் இதற்காக முறையான திட்டமொன்றை முன்னெடுக்குமாறும் மாகாண அதிகாரிகளுக்கும் அதிபர்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இது பற்றிய மேலதிக தகவல்களை அடங்கிய சுற்றுநிருபமும் பாடசாலை நடவடிக்கைகளை உள்ளடக்கிய நாட்காட்டியும் கல்வி அமைச்சினால் விரைவில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# திறந்த போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2020 எதிர்வரும் 30.12. 2020 ஆம் திகதி புதன்கிழமை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

எனவே அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடனோ அல்லது 021 221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ உடனடியாக தொடர்பு கொள்ளுமாறும் எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (ஜ)

# பொலித்தீன் பொருட்களுக்குத் தடை விரைவில் வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

பொலித்தீனாலான 6 உற்பத்திப் பொருட்களை தடை செய்வதற்கான வர்த்தமானியை ஜனவரியில் வெளியிட எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் சுற்றுச் சூழல் தொடர்பான பாதுகாப்பு சட்டங்கள் அடுத்த ஆண்டு முதல் கடுமையான முறையில் செயற்படுத்தப்படும் என்றும் சுற்றாடற்றுறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.



சுற்றாடற்றுறை அமைச்சில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஒரு தடவை மாத்திரம் பாவிக்கும் பொலித்தீன் மற்றும் பொலித்தீனாலான உற்பத்திகளை மீண்டும் பாவிப்பதை தடை செய்வதற்கான வர்த்தமானி பத்திரம் சட்டமா அதிபர் திணைக்கள ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய உணவு பொதி உறை (லன்சீட்) மற்றும் பொலித்தீனாலான 6 உற்பத்திப் பொருட்களின் பாவனையைத் தடை செய்யும் வர்த்தமானி அறிவித்தலை ஜனவரி மாதம் வெளியிட எதிர்பார்க்கப் பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ஜ-4)

# விமான சேவைகள் இரத்து

(கொழும்பு)

நாட்டிற்கு இன்று சனிக்கிழமை வருவதற்கு திட்டமிட்டிருந்த சுற்றுலா குழுக்களுடனான அனைத்து விமான சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரி தெரிவித்தார்.

முதன் முறையாக நாட்டிற்கு வருகை தர ரஷ்ய சுற்றுலா குழுவுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சிவில் விமான போக்குவரத்து ஆணையகம் தெரிவித்தது.

அதன்படி 200 இற்கும் மேற்பட்ட ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் அடங்கிய விமானங்கள் இன்று கட்டுநாயக்க மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையங்களுக்கு வருகை தரவுள்ளதாக அண்மையில் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், ஐரோப்பா முழுவதும் பரவி வரும் கொரோனா வைரஸின் புதிய திரிபு காரணமாக திட்டமிடப்பட்ட விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஜ-4)

# சடலங்களை குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் வைப்பதால் ஏற்படும் பாதிப்பு குறித்து எச்சரிக்கை



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் உடல்களை, குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் வைப்பதன் ஊடாக அக்கொள்கலன்கள் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் சுகாதார அதிகாரிகளுடன் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவரின் உடலில் இருக்கும் வைரஸ் அழிவதில்லை. எனவே குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் அவரின் உடலை வைத்திருக்கும்போது அக்கொள்கலன் சேதமடையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்பவர்களின் உடலை, புதைக்கவோ எரிக்கவோ அரசாங்கம் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ஜ-4)

# ஆயுர்வேத மருந்து அனுமதியை நிராகரித்தார் தம்மிக்க பண்டார

(கொழும்பு)

கொவிட்-19 ஒழிப்பிற்கான தடுப்பூசி தொடர்பில் உலக நாடுகளின் கவனம் திரும்பியுள்ள நிலையில், கேகாலையை சேர்ந்த தம்மிக்க பண்டார தயாரித்த பாணி மருந்து அநேக மானவர்களது கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த மருந்து தொடர்பில் ஆராய்ந்த ஆயுர்வேத திணைக்களம் தம்மிக்க பண்டாரவிற்கு ஆயுர்வேத மருந்து உற்பத்தி நிலையமொன்றை பதிவு செய்வதற்கான எழுத்து மூல அனுமதியை வழங்கியுள்ளது.

உற்பத்தி நடவடிக்கைகளுக்காகவே அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய தனக்கு ஆலோசனை வழங்கும் மருத்துவரின் கீழ் மருந்தை உற்பத்தி செய்ய அவரால் முடியும் எனவும் ஆயுர்வேத ஆணையாளர் சதுர குமாரதுங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ஆயுர்வேத மருத்துவ உற்பத்தி நிலையமொன்றை பதிவு செய்வதற்கு தமக்கு கிடைத்த எழுத்து மூல அனுமதியை கேகாலையை சேர்ந்த தம்மிக்க பண்டார நிராகரித்துள்ளார். (ஜ-4)

# கொரோனா தடுப்பூசியை விரைவில் கொண்டுவர வேண்டும்-ஜனாதிபதி

(கொழும்பு)

**கொரோனா தடுப்பூசி நாட்டிற்கு கொண்டுவரப்படுவதை விரைவுபடுத்த வேண்டியது அவசியமானது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



அமெரிக்கா, பிரித்தானியா, சீனா உள்ளிட்ட பல நாடுகளில் கொரோனா தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அந்த தடுப்பூசிகள் குறித்து விரிவாக ஆராய்ந்ததன் பின்னர், குறித்த நாடுகள் மற்றும் இலங்கையின் சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தேவையான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்கவை நியமித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி வழங்கப்பட வேண்டிய மக்கள் குழுக்கள் தொடர்பாக, அவர்களது தேவை மற்றும் வாழும் சூழலின் அபாயத் தன்மை என்பவற்றின் முன்னுரிமை அடிப்படையில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தோட்டங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் விடுதிகள் உட்பட நோய் பரவும் சாத்தியம் அதிகம் காணப்படும் இடங்கள் மற்றும் ஆபத்தில் உள்ள இடங்கள் மற்றும் மக்கள் குழுக்கள் பற்றிய தரவுகளை சேகரிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# தென்மாகாணத்தில் 771 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

தென்மாகாணத்தில் 771 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இதுவரை உறுதி செய்யப்பட்டுள்ளதாக அம்மாகாணத்தின் கொரோனா தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய காலி மாவட்டத்தில் 438 பேருக்கும் மாத்தறை மாவட்டத்தில் 266 பேருக்கும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 67 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கொரோனா தகவல் மையத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சாமரா மகாகமகே தெரிவித்துள்ளதாவது, "தென்மாகாணத்தில் நேற்று முன்தினம் மாத்திரம் 11 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

காலியில் 6 பேருக்கும் அம்பாந்தோட்டையில் 5 பேருக்கும்நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மாத்தறை மாவட்டத்தில் புதிய தொற்றாளர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை. (ஜ-4)

# ஐ.நாவுடன் மோத வேண்டாம்

## கோட்டாவுக்கு சஜித் அறிவுரை

(கொழும்பு)

ஐ.நாவுடன் இணைந்து பயணிக்க வேண்டிய கடப்பாடு அதன் உறுப்பு நாடான இலங்கைக்கு உள்ளது. இதை அரசு உதாசீனம் செய்தால் பெரும் விபரீதங்களைச் சந்தித்தே தீரும் என எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஐக்கிய நாடுகள் சபை மிகவும் பலம் வாய்ந்த அமைப்பு. உலகெங்கும் நடக்கும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அந்த சபைதான் முக்கிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கும்.

எனவே, ஐ.நாவுடன் இணைந்து பயணிக்க வேண்டிய கடப்பாடு அதன் உறுப்பு நாடான இலங்கைக்கு உள்ளது. இதை அரசு உதாசீனம் செய்தால் பெரும் விபரீதங்களைச் சந்தித்தே தீரும்.

சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை இந்த அரசு நிறைவேற்றாவிட்டால் இலங்கை மீதான அழுத்தங்கள் அதிகரித்தே செல்லும். இந்த விடயத்தில் நாட்டின் நலன் கருதி அரசு மிகவும் பக்குவமாகச் செயற்பட வேண்டும்.

கடந்த நல்லாட்சி அரசில் நாம் சர்வதேசத்தை மதித்து நடந்தோம். எமது இராஜதந்திர நகர்வுகளை உலகெங்கும் விஸ்தரித்தோம். அதனால்தான் இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்கள் இல்லாமல் இருந்தன.

கொரோனா ஒரு கொடிய நோய். அது உலகெங்கும் உயிராபத்தை ஏற்படுத்தி வருகின்றது.

இந்தநிலையில், அதனுடன் ஜெனிவா விவகாரத்தையும் ஜனாதிபதி ஒப்பிட்டுப் பேசுவது கீழ்த்தரமான அரசியலாகும்.



எடுத்ததுக்கெல்லாம் ஐ.நாவை எதிரியாகப் பார்க்கும் நிலையிலிருந்து இந்த அரசு மாற வேண்டும். இலங்கை மீது புதிதாக ஐ.நா. பிரேரணை வந்தால் அதற்கு இந்த அரசே முழுப் பொறுப்பு. புதிய பிரேரணை வருவதற்கு இந்த அரசே வழி வகுத்தது" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# ஜனாஸா எரிப்புக்கு எதிராக வெள்ளை துணி கட்டி போராட்டம்



(கொழும்பு)

ஜனாஸா எரிப்புக்கு எதிராக, வெள்ளை துணி கட்டி கவனயீர்ப்பு போராட்டமொன்று கல்முனை பிரதான வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.


ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனை தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ். அப்துல் ரஸாக்கின் ஏற்பாட்டில், கல்முனை பிரதான வீதியில் கொரோனா சுகாதார நடைமுறைக்கமைய குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டமானது பல்வேறு சுலோகங்களை தாங்கி மேற்கொள்ளப்பட்டதுடன், பொது மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் நேர காலத்துடன் முடிவுறுத்தப்பட்டது.

இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.எச்.எம்.ஏ.மனாப் உள்ளிட்ட அரசியல், சமூக, பொதுநல செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர். (ஜ-4)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# உலக முஸ்லிம் லீக்கினால் வழங்கப்பட்ட 5 மில்லியன் டொலர் எங்கே?-விஜேதாச



(கொழும்பு)

உயர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக உலக முஸ்லிம் லீக் அமைப்பினால் வழங்கப்பட்ட 5 மில்லியன் டொலருக்கு என்ன நடந்தது என்பதை தேடிப்பார்க்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தரவுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலே இதனைத் குறிப்பிட்டுள்ளார். குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2019 ஜுலை மாதம் உலக முஸ்லிம் லீக் அமைப்பின் சமாதான சம்மேளனம் மாநாடு கொழும்பு தாமரைத் தடாக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. அதில் கலந்து கொண்டிருந்த உலக முஸ்லிம் லீக் அமைப்பின் செயலாளர் கலாநிதி ஷேக் மொஹமட் பின் அப்துல் கரீம் அல் ஈஸாவினால் 5 மில்லியன் ரூபா கொடையாக வழங்கப்பட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

குறித்த நன்கொடையானது, உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் மரணித்தவர்களின் உறவினர்களுக்கு மற்றும் தாக்குதலில் காயமடைந்து அங்கவீனமுற்றிருப்பவர்களுக்கு வழங்குவதற்காக வழங்கப்பட்டதாகவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த மாநாட்டில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள், ஜனாதிபதிகளான மைத்திரி பால சிறிசேன, ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

என்றாலும் இவ்வாறு நன்கொடையாக வழங்கப்பட்ட நிதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் மரணித்தவர்களின் உறவினர்களுக்கு மற்றும் தாக்குதலில் காயமடைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்கப்பெறவில்லை.

அதனால் உலக முஸ்லிம் லீக் அமைப்பினால் நன்கொடையாக வழங்கப்பட்ட குறித்த நிதிக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ள வேண்டி இருக்கின்றது.

அதுதொடர்பில் உண்மை நிலையை வெளிப்படுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# வென்டிலேட்டர்கள் நன்கொடை

(கொழும்பு)

வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே இஸ்ரேல் அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட இரண்டு வென்டிலேட்டர்களை சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் வைத்தியர். எஸ்.எச். முனசிங்கவிடம் வெளிநாட்டு அமைச்சில் வைத்து முறையாகக் கையளித்தார். (ஜ-4)

# கொரோனா வைரஸ் குறித்து உரிய விசாரணைகள் அவசியம்

(கொழும்பு)

கொரோன வைரஸ் எவ்வாறு உருவானது என்பதை கண்டுபிடித்து உறுதி செய்வதற்காக உரிய விசாரணைகள் இடம்பெறவேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கந்தானை சென் செபஸ்டியன் தேவாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கிறிஸ்மஸ் ஆராதனையின் போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் உலகளாவிய தொற்று. தானாக உருவானது என மக்கள் கருத முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். அதிகாரத்தில் உள்ளவர்கள் சூழலை அழிப்பதும் மோசமான வறுமையும் கரிசனைக்குரிய விடயங்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார வளம் என்பது சமூகத்தின் சிறிய குழுவினரின் கரங்களிலேயே காணப்படுகின்றது என தெரிவித்துள்ள அவர், கொரோனா வைரஸ் வறிய மக்களை மோசமாக பாதித்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (ஜ-4)




**தோற்றம்: 11.04.1947**

**மறைவு: 25.12.2020**

# மரண அறிவித்தல்

## திரு.செல்லர் செல்வநாயகம்

**(ஓய்வுபெற்ற லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்)**

உடுவில் இராமலிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட செல்லர் செல்வநாயகம் 25.12.2020 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சித்தர் தேவமலர் ஆகியோரின் அன்பு மருமகனும், இரஞ்சி தேவராணியின் அன்புக்கணவரும், செல்வந்தா(போதகர்-தென்னிந்திய திருச்சபை), ஜெயந்தா(ஆசிரியை யா/மகாஜனாக்கல்லூரி), தோமஸ் துஷ்யந்தன் (துருக்கி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவரான ஜெயரஞ்சினி மற்றும் சுகந்தினி, யசோதரன், தர்சினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவரான ஆகாஷ் மற்றும் வினோஜன் (யா/பரியோவன் கல்லூரி), அபிநாஸ் (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), கிறிஸ்ரிகா (யா/உடுவில் மகளிர் கல்லூரி), கபிலக்ஷன் (க/புனித பற்றிமா கல்லூரி), கஸ்வின்(யா/உடுவில் மகளிர் கல்லூரி), யதுஷா (புனித பற்றிமா கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனாரும் காலஞ்சென்றவர்களான திரேசா நேசமலர், அன்புமலர், தேவமலர் மற்றும் பேரின்பநாயகம் (ஓய்வுபெற்ற வீதி புனரமைப்பு மேற்பார்வையாளர்), குலநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான S.V.பிரான்சிஸ் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), S.தம்பித்துரை (ஓய்வுபெற்ற அதிபர்) மற்றும் Dr.A.யோகராஜா (ஓய்வுபெற்ற வைத்திய நிபுணர், GREEN MEMORIL HOSPITAL-MANIPAY), இராசகுலதேவி, அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை 27.12.2020 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.
077 690 4236

(5061)

தகவல்:
குடும்பத்தினர்.

# பாடசாலையின் பௌதீக வளத்தை பார்வையிட்டார் அங்கஜன்



(யாழ்ப்பாணம்)

மாதகல்/ சென்.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலைக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டார்.

சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை சமூகத்தின் விசேட அழைப்பின் பேரில் பாடசாலை சுற்றாடல் நிலைமைகளை அறிவதற்காக பாடசாலைக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அப்பாடசாலையின் பௌதீக வளப்பற்றாக்குறைகள் பற்றி அறிந்து கொண்டார்.

குறித்த பாடசாலை மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குகின்ற போதும் பாடசாலையில் பௌதீக வளங்கள் குறைவாகவே காணப்படுவதாக பாடசாலை அதிபர் அங்கஜன் இராமநாதனுக்கு சுட்டிக்காட்டி தேவைப்பாடுகள் பற்றிய கோரிக்கைக் கடிதம் ஒன்றையும் அங்கஜன் இராமநாதனிடம் கையளித்தார்.

இந்த விஜயத்தின் போது ஆசிரியர்கள், பெற்றோர்கள், அப்பகுதி மக்கள் எனப் பலரும் உடனிருந்தனர். (5-4)

# சட்டவிரோத மின் வேலி பாதிக்கப்படும் வீட்டுப் பிராணிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வரணி-மாசேரிப் பகுதியில் தனியார் காணி ஒன்றிற்கு சட்ட விரோதமான முறையில் மின் பாய்ச்சப்பட்டிருப்பதால் வளர்ப்பு நாய்கள் அதில் சிக்கி அநியாயமாகப் பலியாகுவதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காட்டுப் பன்றி பிடிப்பதற்காக சட்டவிரோதமான முறையில் மின் கம்பத்தில் இருந்து நேரடியாக காணியின் முட் கம்பிகளுக்கு பாய்ச்சப்படும் மின்சாரத்தில் சிக்கியே வளர்ப்பு நாய்கள் உயிரிழப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அருகில் குடிமனைகள் உள்ள நிலையில் மாரி காலத்தில் குறித்த மின் வேலியால் மனித உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும் அபாயநிலை காணப்படுவதாகவும் முறைப்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (5-4-30)



கரவெட்டி மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் கன்பொல்லை மக்கள் ஒன்றியம் மக்கள் நலம்புரிச் சங்கத்தினால் 2019, 2020 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபன் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தார். (படம்:- மகாலிங்கம்)

# யாழில் விசேட குற்றத்தடுப்பு பிரிவினரின் 4 மணி நேர சுற்றிவளைப்பில் 36 பேர் கைது

(நல்லூர்)

யாழ்.மாவட்ட விசேடகுற்றத் தடுப்புப்பிரிவினரால் கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட 4 மணிநேர சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 36 பேர் கைது செய்யப்பட்டதுடன் 25.5 லீற்றர்கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் பண்டிகைகளை முன்னிட்டு யாழ். மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவினரால் விசேட தடுப்பு காவல் மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பண்டிகை நாட்களில் இடம்பெறுகின்ற குற்றச் செயல்களை தடுக்கும் நோக்குடன் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலின் பேரில் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன்போது நேற்று முன்தினம் இரவு 4 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 36 பேர் கைது செய்யப்பட்டதுடன் 25.5 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதில் சந்தேகத்தின் பேரில் 14 பேரும், நீதிமன்ற பிடியாணையில் 6 பேரும், குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டு வந்ததாக தேடப்பட்டு வந்த 6 பேரும் கைது செய்யப்பட்டதுடன், யாழில் 1.5 லீற்றர் கசிப்பும் கொடிகாமத்தில் 24 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது.

மேலும் வீதி தடுப்பு காவல் நடவடிக்கையில் மது போதையில் வாகனம் செலுத்திய 6 பேரும், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய 3 பேரும், ஆபத்தான முறையில் வாகனத்தை செலுத்திய ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் 27 வீதி போக்குவரத்து மீறல் குற்றங்களும் பதியப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள். மேலதிக விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (5-4-33)



யாழ்ப்பாணம் பெரியகடை (ஜே/80) மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

# இசைத்தட்டு கையளிப்பு



(பொற்பதி)

கடந்த 2004 ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தினால் உயிர் நீத்த உறவுகளின் நினைவு தினத்தை முன்னிட்டு சுனாமி நினைவேந்தல் கீதம் வெளியீடு நேற்று உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் இடம்பெற்றது. எழுச்சிக்கவி யாழ் மருதன் அ.வினோத்தின் கவிவரிகளுக்கு சகிலன் மற்றும் கோபிகா ஆகியோர் குரல் வழங்கியுள்ளனர்.

இசைக்கவி கலையகத்தினர் இந்த சுனாமி நினைவேந்தல் கீதம் இசைத்தட்டை வெளியிட்டுள்ளனர். உடுத்துறை சுனாமி நினைவாலய நிர்வாகத்திடம் இசைக்கவி கலையகத்தினரால் இந்த இசைத்தட்டு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. (5-64)

# குளத்தை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(குப்பிழான்)

ஏழாலை தெற்குப் பொல்வொத்த குளம் இருந்த இடமே தெரியாமல் தற்போது மூடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

இக்குளம் கடந்த 25 வருடங்களாக மூடப்பட்ட நிலையில் காணப்படுவதால் தாம் மழை காலங்களில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

சுமார் நூறு வருடங்கள் பழமையான இக்குளம் கடந்த யுத்த காலத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகளால் மூடப்பட்டது.

இதனால், கடந்த பல வருடங்களாக மழை காலங்களில் வெள்ளப் பெருக்கினால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் புரேவிப் புயலின் தாக்கத்தால் ஏற்பட்டிருந்த வெள்ளப் பெருக்கினால் மேற்படி பகுதியை அண்டியுள்ள 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்ததுடன், விவசாயப் பயிர்ச் செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, மூடப்பட்ட நிலையில் காணப்படும் ஏழாலை தெற்கு பொல்வொத்த குளத்தை புனரமைப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதன்மூலம் எதிர்காலத்தில் குறித்த பகுதியில் ஏற்படும் வெள்ளப் பாதிப்புக்களை இல்லாமல் செய்ய முடியும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (5-4-18)

## மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தலுக்கு

(கொழும்பு)

திக்வெல்ல பகுதியின் யோனகபுர கிழக்கு மற்றும் யோனகபுர மேற்கு பகுதிகள் உடன் அமுலுக்கும் வரும் வகையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் ஷவேந் திர சில்வா தெரிவித்துள்ளார். (ஜ-4)

## கைதிகளுக்குப் பிணை

கொழும்பு)

சிறைச்சாலைகளிலுள்ள கைதிக ளின் எண்ணிக்கையைக் குறைப்ப தற்காக 8600 கைதிகளை பிணை யில் விடுவிக்கவுள்ளதாக சிறைச்சா லைகள் திணைக்களம் தெரிவி த்துள்ளது.

கொரோனாத் தொற்று காரண மாக சிறைக் கைதிகளுக்கு அசௌ கரிய நிலை ஏற்பட்டுள்ளதால், குழப் பங்கள் உருவாவதாகவும் அதனைக் கட்டுப்படுத்த நீதி அமைச்சர், சட்டமா அதிபருடன் கலந்துரையாடி 8600 பேரை பிணையில் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் சிறைச் சாலைகள் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

"சிறைக் கைதிகளின் நெரிசலைக் குறைக்கும் பட்சத்தில், இந்தப் பிரச்சி னையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரமுடியும்.

அவ்வாறான சூழ்நிலை உருவா கும் பட்சத்தில் மேற்கொள்ளும் நடை முறைகள் தொடர்பில் கருத்திற்கொள் ளப்படும்" என் அவர் மேலும் தெரி வித்தார். (ஜ-4)

## மாரடைப்பு ஏற்பட்டவரிடம் 81 ஆயிரம் ரூபா பணம் கொள்ளை

(கொழும்பு)

காரில் பயணித்துக் கொண்டி ருந்த போது திடீரென மாரடைப்பு ஏற்பட்ட நபரிடம் இருந்து 81 ஆயிரம் ரூபாய் பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள் ளது.

இந்த சம்பவம் படல்கும்புர - எல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபர் புத்தல பிரதே சத்தில் இருந்து தனது வீட்டிற்கு வந்த போது இந்த திடீர் மாரடைப்பு ஏற்பட் டுள்ளது.

காரை அருகில் நிறுத்தி விட்டு உதவி கோரியுள்ள நிலையில் லொறி ஒன்றில் சென்ற மூவர் அவரிடம் பேச முயற்சித்துள்ளனர்.

எப்படியிருப்பினும் அவரால் பேச முடியாமல் போன சந்தர்ப்பத்தை பயன் படுத்தி சந்தேக நபர்கள் பாதிக்கப்பட்ட நபரின் பையில் இருந்து 81 ஆயிரம் ரூபாய் பணம் கொள்ளையடித்துள் ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர் வேறு சிலர் பொறியிலாளரை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ள்ள நிலையில் அவருக்கு கண்டி வைத் தியசாலை இதய சிகிச்சை மேற்கொள் ளப்பட்டுள்ளது. (ஜ-4)

## இருநூறு பக்தர்களுக்கே அனுமதி

(கொழும்பு)

சிவனொளிபாத மலைக்கான யாத் திரை காலம் எதிர்வரும் 29 ஆம் திகதி யுடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், கொரோனா அச்சுறுத்தல் காரண மாக, சுகாதார வழிமுறைகளுக்கமைய செயற்பாடுகளை முன்னெடுக்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே, வழிபாட்டுக்குரிய இடத்தில் ஒன்றுகூடக்கூடிய பக்தர்களின் எண் ணிக்கையை 200 ஆக மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## பத்துப் பேர் சுய தனிமை

(கொழும்பு)

பிறந்த நாள் விருந்துக்கு சென்ற எட்டு உறுப்பினர்கள் உட்பட 10 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஹற்றன்- டிக்கோயா நகர சபை யின் ஆளும் எதிரணி உறுப்பின ர்கள் அடங்கலாக எட்டு பேர் நகர சபையின் செயலாளர் முன்னாள் மத்திய மாகா ணசபை உறுப்பினர் ஒருவருமே 14 நாட்களுக்கு சுய தனிமைக்கு உட்ப டுத்தப்பட்டுள் ளனர்.

ஹற்றன்- டிக்கோயா நகர சபை யின் எதிர்க்கட்சி உறுப்பினரின் பிறந்த தின விருந்துபசாரத்தில் கடந்த 19 ஆம் திகதி கலந்து கொண்டவர்களே இவ் வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ள னர். (ஜ-4)

## விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

வனாத்தவில்லு - எலுவான்குளம் - ரால்மடுவ வயல்நிலப் பகுதியில் 150 இற்கும் அதிகமான பறவைகள் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக் களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நேற்று முன்தினம் கிடைத்த தகவலுக்கு அமைய, வனஜீவராசி கள் திணைக்களத்தி னர் குறித்த பகுதிக்கு சென்று மேற்கொண்ட ஆய்வில் பறவைகள் உயிரிழந்தமை கண்ட றியப்பட்டுள்ளது. (ஜ-4)

**வேலையாட்கள் தேவை**

பருத்தித்துறை நகரின் பஸ் நிலையத் திற்கு அருகாமையில் இயங்கி வரும் சண் கலர் லாப் அன்ட் பிறிண்டிங் எனும் நிறுவ னத்தி ற்கு பிறிண்ட், டிசைனிங், பிறேம்கள் மற்றும் பனர் போட் செய்வதற்கு பணியாட் கள் தேவை.

(C-1020)

**தொடர்புகளுக்கு: 077 727 5213**

**யாழ்.சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கம் 59ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்**

மேற்படி நிறுவனத்தின் 59 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் 27.12.2020 நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவிருப்பதனால் சகல அங்கத்தவர்களையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள் கின்றோம். (5054)

**செயலாளர்**



சிவமயம்

ஓம் நமசிவாய

**காலத்தின் தேவையை உணர்ந்து இயற்கையை மதித்து ஆசார சீலராக திருமுறையையும் பஞ்சாட்சர மந்திரமாகிய ஓம் நமச்சிவாயவும் ஓதி இன்பமாய் அறநெறியில் வாழ்வோமாக**



இந்த மண்ணுலகத்திலே, தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள சைவர்கள் வழிபாட்டிற்குப் பொருந்திய வைகறைக் காலத்தில் நித்திரை விட்டெழுந்து செவ்வையாக நீராடிச் சிவசிவ என்று சிறந்த மலர்களைக் கொய்து சிவபெருமான் திருவடிகளை அருச்சித்து தேவாரங்களைப் பாடி, கொடிய வினைகளை நீக்கி எங்களை ஆட்கொள்ளுவீர் என்று சிவசிவ ஓம்நமசிவாய என வழிபடுவார்கள்.

மார்கழி மாதத்தில் தேவ தேவனாகிய சிவபெருமான் திருக்கோயில் ஆசாரசீலராக சென்று சிவசிவ ஓம் நமசிவாய என மனதில் தூய சிந்தனையுடன் ஆலயம் சுற்றி வந்து துன்பங்கள் எல்லாவற்றையும் நீக்கி அருள வேண்டும் என்று திருவாதிரை நாளுக்கு முன்னே சொல்லப்பட்ட ஒன்பது நாளும் திருவெம்பாவை ஓதி அருகில் இருந்து கேட்டு அன்பு மிகுந்த வழிபடுவதற்குச் சிறந்த அருள்மிகு திருவிழா நாளாகும். திருவெம் பாவாகிய திருவாதிரை விழா கடல் சூழ்ந்த இவ்வுலகம் உய்வடையுமாறு தில்லையம்பலத்தில் நின்று திருநடனஞ் செய்கின்ற நடராசப் பெருமானுக்குச் சிறப்பானதாகும்.

கோயில்கள் தோறும் திருவாதவூரடிகளின் வரலாறாகிய அழகனமந்த திருவாதவூரடிகள் புராணத்தையும் படிப்பார்கள். நால்வகை முத்திகளுள் மேலான சாயுச்சிய முத்தியைப் பெற்றவராகிய மாணிக்கவாசகர் சுவாமிகள் திருவண்ணாமலையில் மார்கழி மாதத்தில் காலை (புலரிக் காலம்) நீராடும் மகளிரைப் பார்த்து அவரது பக்தி மிகுதியை வியந்து அவர் கூற்றாகத் திருவெம்பாவை பாடல்களை திருவாய் மலர்ந்தருளினார். திருவெம்பாவைக் காலங்களில் ஈழத்துச் சிதம்பரத்திலும் மற்றும் எல்லா ஆலயங்களிலும் காலையும் மாலையும் திருவெம்பாவை படிப்பார்கள். பக்தி மிகுந்த சைவர்கள் வீடுகளில் மார்கழி மாதம் முழுவதும் திருவாசகம் ஓதுவார்கள்.

எம்முன்னோர்கள் தமிழ் மரபு, சைவ மரபு என்னும் வரம்புக்குட்பட்டு இறைவன் திருவருள் பாலித்த திருப்பணிக்கும் கருவியாகவிருந்து அப்பணிக்கே வாழ்நாளை அர்ப்பணித்த அடியார்களும் நமது சமுதாயமும் ஆகும்.

இன்று கொரோனா வைரஸினால் உலகமே தடம்புரண்டு கொண்டிருக்கின்றது. இறைவனை,இயற்கையை மனிதன் இழிவுபடுத்த தொடங்கியதாலேயே இந்த இடர் ஏற் பட்டுள்ளது என்று கூறப்படுவதில் உண்மை இல்லாமல் இல்லை. இந்து மத ஆலயங்களில் அர்த்தமுள்ள பூசைக் கிரியைகளை விட சில இடங்களில் ஆடம்பரமான விடயங்களே கூடிவிட்டது. கலாசாரம் சீர்குலைந்து விட்டது. ஆலயம் செல்லும் பெண்களில் 60 சதவீதமான பெண்கள் தலைவிரி கோலத்துடனே செல்கின்றனர். தலைவிரி கோலம் ஆகாது என ஆன்றோர் சொல்லி வைத்ததை நாம் சிந்திக்க வேண்டும். பெண்கள் கலாசார உடையை, அடக்கமான ஆடைகளை அணிந்து கோயிலுக்கு செல்ல வேண்டும்.

அநேகமானோர் அரைகுறை ஆடைகளை அணிந்து கொண்டு செல்கின்றனர். எமது மூத்த சந்ததியினர் கோயில்களில் ஆசாரத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்தனர். விரதகால வழிபாட்டில் ஒருவருக்கு அருகே வேறொருவர் நிற்கக் கூடாது, தொடுதல் கூடாது, இடைவெளி விட்டுத்தான் நிற்க வேண்டும் என்ற வழிபாட்டு முறையை கடைப்பிடித்தனர். தற்போது ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணுதற்கு பணிக்கப்படுகிறோம். தோய்த்து உலர்ந்த ஆடை கலாசார முறைப்படி அணிந்தே ஆலயத்திற்குச் செல்ல வேண்டும் என்ற தூய்மையைப் பேணினார்கள். கை, கால் கழுவி கோவிலுக்குள் பிரவேசிக்க வேண்டும் என முன்னோர் இறுக்கமாக கடைப்பிடித்தனர். கொரோனா அச்சுறுத்தியும் நாம் கை, கால் கழுவிச் செல்வதில் அக் கறையாக உள்ளோமா? கோயில்களிலும் நல்ல காரியங்களில் ஈடுபடும் போதும் பெண்கள் லட்சுமிகரமாகக் காணப்பட வேண்டும்.

தற்போது திருவிளக்குப் பூசை செய்யும் போதும் தீபம் ஏற்றும்போதும், தீச்சட்டி ஏந்தும் போது, பாற்குடம் எடுத்து வரும்போதும் அநேகமான பெண்கள் தலைவிரித் தபடியே ஈடுபடுகின்றனர். கல்யாண வீடுகளில் தீபம் கொண்டு செல்லும் பெண்கள் தலை விரிகோலமாக மட்டுமல்ல பாதணிகளுடன் செல்வதைப் பார்க்கக் கூடியதாக உள்ளது. இதெல்லாம் எமது கலாசாரத்தை, சமயத்தை இழிவுபடுத்தும் செயல்களாகவே உள்ளன. காலத்தின் தேவையை உணர்ந்து இயற்கையை மதித்து ஆசாரசீலராக ஆலயம் சென்று திருமுறைகளையும் ஓம்நமசிவாய எனும் பஞ்சாட்சர மந்திரத்தையும் ஓதியும் அன்பு நெறியுடனும் சைவ நெறியுடனும் சமயக் கட்டுப் பாட்டுடன் இங்கு நாம் வாழ்வோம். "ஓம் நமசிவாய"

**க.கு.க.சிவபாலன்**

**அகில இலங்கை திருமுறை மன்றம்,பொருளாளர்.**

(C-1022)

# நிவாரணம் வழங்க முடியாமைக்கு நிதி இன்மையே காரணம்

(நெளுக்குளம்)

உரிய நிதி ஒதுக்கப்படாமையினால் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களிற்கு நிவாரணங்களை வழங்குவதில் சிரமமான நிலைமை காணப்படுவதாக வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கொவிட்-19 தனிமைப்படுத்தல் காரணமாக தவித்து வரும் குடும்பங்களிற்கு நிவாரணங்கள் வழங்கப்படாமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களிற்கு நிவாரணம் வழங்குவதற்கு உரிய. ஒதுக்கீடுகள் எமக்குக் கிடைக்கப்பெறவில்லை.

எனினும் கூட்டுறவுச்சங்கத்திடம் கடன்பட்டே அந்த மக்களுக்கான நிவாரணங்களை வழங்கி வருகின்றோம்.

குறைந்த எண்ணிக்கையுடையவர்கள் என்றால் கடன் வாங்கி வழங்கலாம். அதிகமான தொகையினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையால் நிதி ஒதுக்கீடு இல்லாமல் அதனை சீரான முறையில் வழங்க முடியவில்லை.

தற்போது எமது பிரிவில் திருநாவற்குளத்தில் 30 குடும்பங்களும் சாளம்பைக்குளத்தில் 90 குடும்பங்கள் மற்றும் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்களிற்கு மேல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையால் அவர்களிற்கான நிவாரணத்தினை வழங்குவதற்கு அதிகமான நிதி தேவைப்படுகிறது.

எனினும் கூட்டுறவுச்சங்கத்திடம் 100 குடும்பங்களிற்கான உலருணவு பொதிகளை கடன் அடிப்படையில் வழங்குமாறு கேட்டுள்ளோம் எனவும் சிரமத்திற்கு மத்தி யிலேயே நிவாரணப் பணியினை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார். (5-4-299)




# காணிப்பயன்பாடு தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் காணிப்பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட காணிப்பயன்பாட்டு திட்டமிடல் குழுவின் தலைவருமான க.விமலநாதன் தலைமையில் மாவட்ட செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

பிரதேச மட்ட காணிப்பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்டு மாவட்ட காணிப்பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள காணி தொடர்பான விபரங்கள் பிரதேச ரீதியாக ஆராயப்பட்டது.

மேலும் இக்கலந்துரையாடலில் பொதுத் தேவைக்கு பயன்படுத்தப்படும் காணிகளை கையளித்தல், நீண்டகால மற்றும் குறுகிய காலம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளுக்கான அனுமதி பெறல், காணிக் கச்சேரி மூலம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளுக்கு அனுமதி வழங்குதல், மேச்சல் தரை காணிகளை கையளித்தல் தொடர்பான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஆர். கோகுலதாசன், மாவட்ட செயலக காணிப்பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர் கே.முரளிதரன், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உத்தியோகத்தர்கள் எனப்பலரும்கலந்துகொண்டனர்(5-4-281)

# தேசிய மரநடுகைத் திட்டம் மன்னாரில் ஆரம்பம்



(மன்னார்)

"பிரஜா ஹரித்த அபிமானி" தேசிய மர நடுகை திட்டம் மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று முன்தினம் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் மன்னார் மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.எம். முஹமட் ஸஹீ தலைமையில் நானாட்டான் அறுவைக்குன்று பகுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.நந்தினி ஸ்ரான்லிடிமேல், மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன் மற்றும் நானாட்டான் பிரதேச செயலாலர் எஸ். கிறீஸ்கந்தகுமார், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டு மரங்களை நாட்டி வைத்தனர். (5-4-285)

# நல்லிணக்க நிகழ்வும் விழிப்புணர்வுச் செயற்பாடும்

(மன்னார்)

மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் மெசிடோ ஏற்பாட்டில் மத ரீதியான உரிமைகளைச் சக மதத்தவர்களுடன் இணைந்து வெற்றிகொள்வோம் எனும் தொனிப்பொருளில் கிறஸ்மஸ் நல்லிணக்க நிகழ்வும் கொரோனா விழிப்புணர்வுச் செயற்பாடும் மன்னார் பள்ளிமுனை பெருக்க மரப் பகுதியில் மெசிடோ நிறுவனத்தின் குழுத் தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் நேற்று இடம் பெற்றது.



நாடளாவிய ரீதியில் மதங்களுக்கு இடையில் காணப்படும் கசப்புணர்வுகளை எதிர்கால தலைமுறையினர் மறந்து நல்லிணக்க ரீதியில் மத சுதந்திரத்தைப் பயன்படுத்தும் விதமாக மும்மதச் சிறுவர்களையும் இணைத்து குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பள்ளிமுனை கிராம மக்கள், மெசிடோ நிறுவன ஊழியர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டதுடன் நல்லிணக்க சின்னமான புறாக்கள் பறக்கவிட்டனர்.

(5-4-285)

# மலையாளபுரம் வீட்டுத்திட்டத்தை துரிதப்படுத்த நடவடிக்கை

(கண்டாவளை)


கிளிநொச்சி மலையாளபுரம் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுவரும் 24 வீடுகள் கொண்ட இந்திய வீட்டுத் திட்டத்தின் முன்னேற்ற நிலைமைகளை, கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைப்பாளர் வை.தவநாதன் நேரில் சென்று பார்வையிட்டார்.

கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகாரசபை பிரதிப் பணிப்பாளர் சுபாஸ் மற்றும் இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் ஆகியோருடன் இணைந்து இந்த வீடுகளின் தற்போதைய நிலை குறித்து ஆராயப்பட்டது.

2017 ஆம் ஆண்டு பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வீட்டுத் திட்ட வேலைத்திட்டத்தை விரைவுபடுத்தி பயனாளிகளுக்கு வீடுகளைக் கையளிக்க ஏற்பாடு செய்யும் வழிவகைகள் குறித்து இந்தியத் துணைத்தூதர அதிகாரி மற்றும் தேசிய வீடமைப்பு அதிகாரசபை கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது இத்திட்டத்தைப் பூர்த்திசெய்வதற்கு கிடைக்கவேண்டிய மிகுதி நிதி கிடைக்கப்பெற்றால் விரைவில் இந்தத் திட்டத்தைப் பூர்த்திசெய்ய முடியும் என்று தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கிளிநொச்சி மாவட்ட பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் இந்த வீடுகளுக்கு மின்சார இணைப்புக்கள் வழங்குதல் மற்றும் குடிநீர் விநியோகம் என்பனவற்றை துரிதப்படுத்த உடன் நடவடிக்கை எடுப்பதாக ஒருங்கிணைப்புக் குழு இணைப்பாளர் வ.தவநாதன் தெரிவித்தார். (5-4-315)



**இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதிய திட்டத்தில் இணைந்து 2019 ஆம் ஆண்டு கல்விப் பொதுதராதரப் பரீட்சையில் சித்தியடைந்த இரு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.**

## இராசிபலன்

26.12.2020
மார்கழி 01, சனிக்கிழமை
துவாதசி பின்னிரவு 5.26 மணிவரை
பரணி பிற்பகல் 12.11 மணிவரை
சுபநேரம் 3.27-4.57 மணிவரை
இராகுகாலம் 9.27-10.57 மணிவரை
சந்திராஷ்டமம்:- சித்திரை, சுவாதி
கார்த்திகை விரதம் வளவன்


மேஷம்

ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.


மிதுனம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.


கடகம்

திட்டமிட்ட காரியங்கள் எளிதில் கைகூடும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.


சிம்மம்

மறைமுகப் போட்டிகளையும் எளிதில் சமாளிப்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


கன்னி

உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், திருடர் பயமுண்டு, பணப்பற்றாக்குறை ஏற்படலாம்.


துலாம்

அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.


விருச்சிகம்

எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.


தனுசு

பொன்னான எதிர்காலத்தை அமைக்க புதிய வழிபிறக்கும், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும் வாய்ப்புண்டு.


மகரம்

நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், கௌரவமான நாள்.


கும்பம்

சுதந்திரமாகச் செயற்படுவீர்கள், சமுதாயப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, குடும்பத்தினர் உங்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பர்.


மீனம்

தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

காலம் வீணானால் திரும்பக் கிடைக்காது

## அரசாங்க ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவு

(கொழும்பு)

அரச நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு 2020 ஆம் ஆண்டிற்கான மேலதிக கொடுப்பனவுகளை வழங்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கான அனுமதியை நிதி அமைச்சு வழங்கியுள்ளது.

2019 ஆம் ஆண்டிற்காக நிறுவனங்களில் கணக்கறிக்கைகளின் அடிப்படையில் இந்த கொடுப்பனவுகள் வழங்கப்படும் என திறைசேரியின் செயலாளர் ஆட்டிகல தெரிவித்துள்ளார். (ஜ-4)

## தப்பியோடிய தொற்றாளர்கள் விரட்டிப் பிடித்த பொலிஸார்

(கொழும்பு)

நீர்கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஹோட்டல் நிர்மாணப் பணிகளுக்காக மட்டக்களப்பில் இருந்து வந்த இளைஞர்களில் சிலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்று கண்டு பிடிக்கப்பட்ட நால்வரும் தப்பியோடிய நிலையில் பொலிஸாரால் விரட்டிப் பிடிக்கப்பட்டனர்.

சுகாதார பிரிவு அதிகாரிகள் பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கைக்கு அமையவே கொரோனாத் தொற்றாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். (ஜ-4)

## இளையோரை இலக்கு வைத்து நாட்டிற்குள் புகும் ஆபத்து

(கொழும்பு)

தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்டுள்ள புதிய வகை வைரஸானது இளைய தலைமுறையினரை இலக்கு வைத்து பரவும் ஆபத்தான நோயாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளதால் நாட்டில் விமான நிலையங்களை திறப்பதற்கும், சுற்றுலாத் தளங்களை திறப்பதற்கும் முன்னர் இந்த புதிய அச்சுறுத்தல் குறித்து மிக உன்னிப்பாக அவதானிக்க வேண்டுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது. (ஜ-4)

## அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலையை அடுத்த ஆண்டே கட்டுப்படுத்தலாம் பந்துல திட்டவட்டம்



(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் பூகோள மட்டத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து எம்மால் மாத்திரம் உடனடியாக மீள முடியாது. மக்களின் வாழ்க்கை செலவுகள் தற்போது அதிகரித்துள்ளமைக்கு பல காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை 2021 ஆம் ஆண்டுக்குப் பின்னரே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கை மன்ற கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட்-19 வைரஸ் தாக்கம் முழு உலகிற்கும் சுகாதார மற்றும் பொருளாதார மட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பல செல்வந்த நாடுகள் எம்மை காட்டிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச மட்டத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன் தாக்கத்தில் இருந்து இலங்கை மாத்திரம் விடுபட முடியாது.

2 ஆம் உலக மகா யுத்தத்தினால் இலங்கைக்கு நேரடி தாக்கம் ஏற்படவில்லை. ஆனால் பொருளாதார மட்டத்தில் தாக்கம் ஏற்பட்டன.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தாலும் இந்நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது. ஆகவே சர்வதேச பொருளாதார நெருக்கடியில் இருந்து எம்மால் மாத்திரம் விடுபட முடியாது.

வாழ்க்கைச் செலவுகள் அதிகம் என எதிர்த்தரப்பினர் குற்றம்சாட்டுகிறார்கள். இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை மாத்திரமே அதிகரிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கு பின்னரே அத்தியாவசிய பொருட்களின் விலையினை குறைக்க முடியும். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலையை கட்டுப்படுத்த முடியாது.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த எடுக்கும் தீர்மானங்கள் இனம், மதம் மற்றும் மொழி ஆகிய காரணிகளை கொண்டு எடுக்கவில்லை.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழப்பவர்களின் உடலை தகனம் செய்யும் தீர்மானத்தை சுகாதார குழுவினரே எடுத்தனர்.

இவ் விடயத்தில் அரசாங்கத்துக்கு எவ்வித தொடர்பும் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## குப்பையானது கொத்தமல்லி


(கொழும்பு)

உக்ரேயினிலிருந்து கொத்தமல்லி எனத் தெரிவித்து குப்பை கொள்கலன்கள் மறுபடியும் நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளமை சுங்கப் பிரிவினரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

8 இறக்குமதியாளர்களினால் உக்ரேயினிலுள்ள **AGRO NIKA TRADE** எனப்படும் நிறுவனத்தினால் இந்தக் கொள்கலன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

கடந்த 10ஆம் திகதி இந்த 8 கொள்கலன்களும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்பதுடன், மேலும் 20 கொள்கலன்கள் கடந்த 21ஆம் திகதி இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ஜ-4)

# 16 ஆண்டுகள் ஆனதோ! ரணமாய் சுனாமி நினைவுகள்



சுனாமி ஏற்பட்டு 15 வருடங்கள் கடந்திருக்கின்றன. ஆனால் அதன் வடுக்கள் இன்னும் மீளாத நிலையில் உள்ளன.

இயற்கையின் சீற்றம் ஏற்படும்போது மக்களே விழிப்பாகவும் சிறப்பாகவும் தங்களை தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை கடந்த சுனாமிப் பேரழிவு எமக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருக்கிறது.

சுமத்ரா தீவுப் பகுதியில் ஏற்பட்ட பூகம்பம் 8.9 ரிக்டர் அளவு பதிவாகியுள்ளது. கடற்பரப்பில் ஏற்பட்ட இதே வேகமுள்ள நில நடுக்கம் தரைப் பகுதியில் ஏற்பட்டிருந்தால் ஆசியாவின் பல நாடுகள் தரை மட்டமாகியிருக்கும். இதன் பாதிப்பு பல ஆயிரம் அணு குண்டுகள் வெடித்ததற்குச் சமமாக இருக்கும் என்று புவியமைப்பியல் வல்லுநர்கள் அப்போது தெரிவித்திருந்தனர்.

சுனாமி போன்ற தாக்கங்களை நாம் எதிர் கொண்ட போது உலகத்தின் மீதுள்ள பற்று காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக ஆயுள் முழுவதையும் செலவு செய்து சேகரித்துக் கொண்ட பொருட்கள் சில நொடிகளில் அழிந்து போயின. அதேபோன்று மரணத்திலிருந்தும் எம்மால் தப்ப முடியாது போனது என்பது எமக்கு முன்னுள்ள படிப்பினையாகும்.

உலகில் சுனாமி, பூகம்பம், புயல், மழை வெள்ளம், எரிமலை வெடிப்புக்கள் என பல நடந்து கொண்டேயிருக்கின்றன. கடந்த 100 வருடங்களில் மிகவும் மனித இனத்தை பாதித்த சம்பவங்களாக 1923 ஆம் ஆண்டு ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பத்தில் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் பேர் இறந்தனர், 1935 இல் இந்தியாவின் குவெட்டாவில் 50,000 பேரும், 1939 இல் சிலியில் 28,000 பேரும், அதே ஆண்டு துருக்கியில் 33,000 பேரும், 1960 இல் மொரோக்காவில் 12,000 பேரும், 1976 இல் சீனாவில் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் பேரும், அதே ஆண்டு கவுதமாலாவில் 23, 000 பேரும், 1978 இல் ஈரானில் 25,000 பேரும், 1985 இல் மெக்ஸிக்கோவில் 9,500 பேரும், 1988 இல் ஆர்மீனியாவில் 25,000 பேரும், 1990 இல் ஈரானில் 50,000 பேரும், 1993 இல் இந்தியாவின் லட்டூரில் 10,000 பேரும், 1995 இல் ஜப்பானில் 6,000 பேரும், 1998 இல் ஆப்கானிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தானில் 5,000 பேரும், 1999 இல் துருக்கியில் 17,000 பேரும், 2001 இல் குஜராத்தில் 13,000 பேரும், 2003 இல் ஈரானில் 41,000 பேரும் பூகம்பத்தால் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவை பேரழிவு ஏற்படுத்திய பூகம்பங்களின் பட்டியல்.

இவை தவிர சில ஆயிரக்கணக்கில் பலி கொண்ட பூகம்பங்களும் உண்டு. இவை மனித இனத்தை பெரிதும் பாதித்தாலும் மிருக இனங்கள் பெரிதும் தப்பிக் கொள்வதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. இவை அனைத்தும் மனிதனை தூய்மைப்படுத்தவும், சிந்திக்கவும் வைத்தது.

அனர்த்தங்கள் சம்பவிக்கும் வேளைகளில் அவற்றிற்கு ஆயத்தமாகும் முகமாக அனர்த்த முன்னாயத்த திட்டங்கள், அறிவூட்டல், அனர்த்த அறிவிப்பு ஒலியெழுப்பல், சகல மட்டங்களிலும் விருத்தியாக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம் மற்றும் தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கை ஆகியவற்றிலும் இந்த விடயங்கள் தெளிவாக குறிப்பிடப் பட்டுள்ளன.

கி.மு. 426 கிரேக்க வரலாற்றாசிரியர் தியுசிடைட்ஸ், சுனாமி ஏற்படுவதற்கான காரணங்களை 'பிலோப்போனேசியப் போர் வரலாறு' என்ற புத்தகத்தில் கூறியுள்ளார். அவர் தான் முதன் முதலில் கடலில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்றும், எந்த இடத்தில் நிலநடுக்கம் கடலில் உண்டானதோ அங்கு கடல் உள்வாங்கும். பின்பு திடீர் பின்வாங்குதலும், மறு இரட்டை சக்தியும் கொண்ட வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. நில நடுக்கம் ஏற்படாமல் இப்படி ஒரு விபத்து ஏற்படவாய்ப்பே இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி. 365 இல் அலெக்சாண்டிரியாவில் மிகப் பெரிய அழிவுக்குப்பின் ரோமன் வரலாற்றாசிரியர் அம்மியனஸ் மாசில்லினுஸ் சுனாமி என்பது, நில நடுக்கத்தில் தொடங்கி கடல் நீர் பின்னடைவு, அதைத் தொடர்ந்து இராட்சத அலை என்ற தொடர்ச்சியான நிகழ்வாக அமைகிறது என்றார். அதாவது, நிலநடுக்கம் என்பது நிலப்பகுதியில், கடல் பகுதியில், மலைப்பகுதியில் ஏற்படும். நிலப் பகுதியில் வந்தால் நிலத்தில் உள்ளவை அதிர்ந்து சேதமாகிறது. கடலில் வந்தால் கடலின் ஆழமான பகுதியிலுள்ள நிலத்தட்டுக்களின் அசைவு பெரிய அலைகளை உருவாக்குகின்றது.

மலையில் எரிமலையாக உருவெடுக்கிறது. பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரே நிலத்தட்டுத் தான் இருந்தது. அதன் மீது தான் பூமி இருந்தது. ஆனால் கண்டங்களாகப் பிரியப் பிரிய அதன் தட்டு வெப்ப இயற்கை சூழ்நிலைகளுக்கு ஏற்ப, பல்வேறு நிலத்தட்டுக்கள் உருவாகின. இந்தத் தட்டுக்களின் மீது தான் ஒவ்வொரு கண்டமும் இருக்கின்றன. நிலம், கடல் எல்லாவற்றையும் தாங்கி நிற்பது இந்த நிலத்தட்டுக்கள்தான். இதைத் தான் 'டெக்டானிக்

பிளேட்கள்' என்று பு
றனர்.

கடல் படுகையில் தி
மேலிருக்கும் தண்ண
அடைவதால் சுனாமி
நடுக்கங்கள், பூமியின்
உண்டாகும். இது கட
சிதைக்கப்பட்ட பகு
நிலையில் இருந்து
தட்டுகளின் தவறான
குத்தாக நீர் இடப்பெய

இயக்கத்தில் ஏற்ப
கடல் படுகையில் இட
இவை பெரிய சுனா
சுனாமிகள் ஒரு சிறி
அலை நீளமும் உ
அலை 30 அல்லது
உள்ளவை. ஆனால்
கிலோ மீற்றர் நீளம்
பரப்பைவிட 300
வீக்கம் போன்று உ
நிலை அடையும்
மேலெழுகிறது. சுன
கடலோரப்பகுதியை

ஏப்ரல் 1946,
தீவுகளுக்கு அருகில்
ஏற்பட்டது. இதனால்
மேலே எழுந்து ஹவ
இடத்தையே அழித்து

1960 வால்டிவிய
அலாஸ்கா பூகம்ப
இந்தியப் பெருங்கட
இல் தோஹு பூகம்
அண்மையில் நிகழ்
பூகம்பங்கள். ஜப்பான
ஏற்பட்டு அருகிலுள்ள
சில நிமிடங்களில் ப

1950களில் பெரு
பெரிய சுனாமிகள்
பப்பட்டது. நீருக்கடி
ஏற்படும் சுனாமி
அழைத்தனர். இ
இடப்பெயர்ச்சி செய்
சரிவினால் உண்ட
வாக்கத்தால் உ
நீருக்குள்ளேயே செ



என்று புவியியல் நிபுணர்கள் கூறுகின்

டுகையில் திடீரென ஏற்படும் மாற்றத்தால் தம் தண்ணீர் செங்குத்தாக இடமாற்றம் ல் சுனாமி உருவாகும். டெக்டானிக் நில ள். பூமியின் புவி ஓடு உருக்குலைவதால் ம். இது கடலுக்கு அடியில் ஏற்படும் போது ப்பட்ட பகுதியிலுள்ள தண்ணீர், சம இருந்து இடம்பெயர்கிறது. டெக்கான் ர் தவறான சுழற்சி காரணமாக, செங் ர் இடப்பெயர்ச்சி செய்யப்படுகிறது.

த்தில் ஏற்படும் சாதாரண தவறுகளாலும் கயில் இடப்பெயர்ச்சி ஏற்படும். ஆனாலும் ரிய சுனாமியை உண்டாக்குவது இல்லை. ா ஒரு சிறிய அலை வீச்சும், மிக நீண்ட ளமும் உடையவை. சாதாரண கடல் 0 அல்லது 40 மீற்றர் அலை நீளம் ட. ஆனால் சுனாமி அலைகள் சில நூறு ற்றர் நீளம் உடையவை. இவை கடல் ட 300 மில்லி மீற்றர் மேலே சிறிய பான்று உருவாகும். அவை தாழ்வான டையும் போது மிக அதிக உயரமாக கிறது. சுனாமியின் சிறிய அலை கூட பகுதியை மூழ்கடித்து விட முடியும்.

1946, அலாஸ்காவில் அலேடன் த அருகில் 7.8 ரிக்டர் அளவுகள் பூகம்பம் இதனால் 14 மீற்றர் உயரத்திற்கு அலை ழந்து ஹவாய் தீவில் உள்ள ஹிலோ என்ற ய அழித்து விட்டது.

வால்டிவியா பூகம்பம் (9.5 ஆறு), 1964 ா பூகம்பம் (9.2 ஆறு), 2004 இல் பெருங்கடல் நில நடுக்கம் மற்றும் 2011 ஹு பூகம்பம் (9.0 ஆறு) போன்றவை யில் நிகழ்ந்த சக்தி வாய்ந்த நீள் ஊடுருவு ள். ஜப்பானில் சிறிய (4.2 ஆறு) பூகம்பம் அருகிலுள்ள கரையோரப் பகுதிகளை ஒரு ங்களில் பாழ்படுத்தியது.

ளில் பெரும் நிலச்சரிவுகள் மூலம் தான் னாமிகள் உண்டானது என்று நம் நீருக்கடியில் ஏற்படும் நிலச்சரிவுகளால் சுனாமியை 'சியோருக்கஸ்' என்று னர். இதனால் அதிக அளவு நீர் ர்ச்சி செய்யப்படுகிறது. ஏனெனில் நிலச் ் உண்டாகும் கழிவுகள் அல்லது விரி தால் உண்டாகும் சக்தி திரும்பவும் ளேயே செலுத்தப்படுகிறது. 1958 இல் மிகப்பெரிய நிலச்சரிவு, அலாஸ்காவின் லிடுயா விரிகுடா பகுதியில் ஏற்பட்டபோது 524 மீற்றர் உயரத்திற்கு (1700 அடிக்கு மேல்) அலை ஏற்பட்டது.

சுனாமிகள் இரு வழிகளில் சேதத்தை ஏற்படுத்துகிறது. பெருமளவு சக்தியுள்ள பெரிய அலை (நீரலை) அதிக வேகத்தில் செல்வதாலும், அலைகள் பெரிய அளவு இல்லாவிட்டாலும் நிலப் பகுதியை மொத்தமாக அழித்து, எல்லாப் பொருட்களையும் தன்னுடன் எடுத்துச் சென்று விடுவதாலும் பெரும் சேதம் ஏற்படுகிறது.

மிகப்பெரிய சுனாமியைத் தவிர நெருங்கிய அலைகளை உடைக்க முடியாது. மாறாக ஒரு வேகமாக நகரும் அலைகளின் துவாரம் போன்று தெரியும். விரிகுடாக்கள் மற்றும் மிகவும் ஆழமான நீர் அருகில் சுனாமிகள் உண்டானால் அலை சுனாமியை ஒரு படிக்கட்டுப் போன்றும், ஒரு செங்குத்தான அலையாகவும் மாற்றுகிறது. இதன் காரணமாகத்தான் ஜப்பானிய மொழியில் இதனை 'துறைமுக அலை' என்று கூறுவர்.

சில நேரங்களில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள், மீன்பிடிக்கும் போது எந்த அசாதாரண அலையையும் உணராமல், கரைக்குத் திரும்பி வந்த பின் கிராமமே பெரிய கடலலையால் அழிவுற்றதைக் கண்டுள்ளனர். இது நாம் கண்ட சுனாமி பேரலையிலும் நடந்ததை சுட்டிக் காட்ட முடியும். சுனாமியின் உச்ச அலை கரையை அடையும் போது, கடல் மட்டம் தற்காலிகமாக உயரும்.

இதை 'ரன்' என்று குறிப்பிடப்படுகிறது. இவை கடல் மட்டத்திற்கு மேலிருந்து அளக்கப்படுகிறது. அலை உச்சிகளுக்கு இடையில் பல மடங்கு அலைகள் பலமணி நேரங்கள் தொடர்ந்து வந்தால், அதைப் பெரிய சுனாமி என்கிறோம்.

சுனாமி பேரலை தாக்கி 15 வருடங்கள் கடந்தும் சுனாமி மற்றும் இயற்கை அனர்த்தங்கள் பற்றிய அறிவினை பெற்றுக் கொள்வதே மனிதர்கள் அதிலிருந்து ஓரளவு தம்மை தற்காத்துக் கொள்ள சிறந்த வழி ஒன்றாகும். வெறுமனே நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தி ஒவ்வொரு வருடமும் இழந்த உயிர்கள், உடைமைகளை நினைத்து அழுது புலம்பி கட்டிப் புரள்வதில் எவ்வித பயனும் மக்களுக்கு ஏற்பட்டு விடப்போவதில்லை.

இன்னொரு அழிவிலிருந்து எமது உறவுகளைக் காக்க உறுதி கொள்வோம்.

## எல்லாம் கடந்து ஒன்றானோம்

சுனாமி வந்து சுக்கு நூறாக்கியபோது
சுபீட்சத்திற்காய் ஒன்றானோம்

இரத்ததானம் வழங்க இங்கு நீண்ட வரிசையில்
இனம் மறந்து ஒன்றானோம்

கண்ட உடல்களைக் காவிச் சென்று
காரியம் செய்ய ஒன்றானோம்

அள்ளுண்டவர்க்கும் குற்றுயிரானவர்க்கும்
அனுதினமும் வேண்டிட
ஆலயங்களில் பூசைகளில் ஒன்றானோம்

ஆழிப் பேரலையில் அழிவைச் சந்தித்து
அழுத மக்களுக்காக நாமும்
அழுது ஆறுதலுக்காய் ஒன்றானோம்

உடுபுடைவை உணவு கொடுத்து
உயிர்கள் காக்க ஒன்றானோம்

தங்க இடமின்றி தவித்த போது
தக்க இடம் கொடுக்க ஒன்றானோம்

உலக நாடுகளிடம் உதவிகள் வேண்டிட
ஊடகங்களில் ஒன்றானோம்

மருந்துகள் தட்டுப்பாடான போது
விருந்துகளை ஒறுத்து
அருமந்த உயிர்காக்க ஒன்றானோம்

வைத்தியசாலையில் கட்டில்கள் நிரம்பியதால்
வைத்திருந்த வீட்டுக் கட்டிலை வழங்கி
மனிதாபிமானத்தில் ஒன்றானோம்

மடியில் கிடத்தி மருந்தைக் கொடுத்து
மனிதநேயத்தால் ஒன்றானோம்

வாகனத்தில் உயிர்களை வகையாக ஏற்றி வந்து
வழியில் உயிர் காக்க ஒன்றானோம்

விற்பனை நிலையங்களையெல்லாம்
விரைவாகப் பூட்டி
வித்தியாசமின்றி ஒன்றானோம்.

பணம் கொடுத்து பாணும் பருப்பும் வழங்கி
பங்காளிகளானோம்

கறுப்புக் கொடிகள் காரியாலயங்களில் கட்டி
கவலைகளில் ஒன்றானோம்

பூதவுடல்களைப் புதைப்பதற்கு நிலம் கொடுத்து
புனிதப் பயணத்தில் ஒன்றானோம்

இத்தனையிலும் இனம் மதம் சாதி பிராந்தியம்
இறுதி வரை கடந்து ஒன்றானோம்

பயங்கர அழிவுக்குள் சிக்கிப் பதினாறு ஆண்டுகளாயின
அலையின் ஈரம் காய்ந்துவிட்டன ஆனால் கண்ணீரின் ஈரம்
இன்னும் காயவில்லை.

ஜெயம் ஜெகன்

# அவரவர் மதத்தின் மூலம் இறைவனை அடையலாம்

தெய்வீக மகான்கள் வாழ்ந்த காலத்தில், அவர்களால் மக்களுக்குக் கொடுக்கப்பட்டவைகளாவன, தெய்வீக நாமம், தெய்வீக ரூபம், போதனைகள், வாழ்க்கைச் செய்தி, நிறுவனங்கள் ஆகியவையாகும்.

அவர்கள் சொல்வதில் மேலோட்டமான கருத்தும் ஆழமான மறைந்த கருத்துமிருக்கும். மேலோட்டமான கருத்துக்களால் மக்கள் முரண்பாடடையலாம். ஆழமான கருத்தை விளங்கிக் கொண்டால், பன்மையில் ஒருமையை உணர்ந்து, எல்லோரும் இன்பமாக, அமைதியாக வாழ்ந்து இறைவனை அடையலாம்.

ஒரு தெய்வீக மகானின் உண்மையான நிலையையும் போதனைகளையும் வாழ்க்கை நிகழ்வுகளையும் இன்னொரு தெய்வீக மகானினால்தான் ஓரளவு விளங்கி மக்களுக்கு விளங்கப்படுத்த முடியும்.

இந்த நோக்குடன் இயேசு பிரானின் வாழ்க்கை வரலாறு, போதனைகள், சில நிகழ்வுகளைப் பற்றியும் சத்ய சாயி பாபா கூறியுள்ளதைப் பார்த்தால் இயேசு பிரானின் தெய்வீகத் தன்மையை மென்மேலும் உணரலாம். வாழ்க்கையில் நிகழ்ந்த சில இடைவெளிகளைப் பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்ளலாம்.

சத்ய சாயி பாபாவின் பிரசாந்தி நிலையம் என்ற ஆச்சிரமம் இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் புட்டபர்த்தி என்ற பின்னடைந்த கிராமத்திலுள்ளது. அங்கு உலகிலுள்ள மக்கள் எல்லோரும் இன, மத பேதமின்றி விழாக்களில் பங்கு பற்றுவார்கள். அங்கு கிறிஸ்மஸ் விழா வருடாவருடம் விமரிசையாகக் கொண் டாடப்படும். அவ்விழாக்களின் போது, சத்ய சாயி பாபா இயேசு பிரானின் வாழ்க்கைப் போதனைகளைப் பற்றி அருளுரை நிகழ்த்துவார். அவ்வுரைகளில் கூறியவற்றில் சிலவற்றையே இங்கு விளங்க முற்படுவோம்.

சத்யசாயி பாபா தான் ஒரு புதிய மதத்தை நிறுவ வரவில்லையென்றும் அவரவர் மதத்தின் மூலம் இறைவனை அடையச் செய்ய உதவுவதற்குமே வந்துள்ளேன் என்றும் பலமுறை கூறியுள்ளார். சகல மதங்களும் உண்மையானவையென்றும், சமமானவையென்றும், ஒரே கடவுளை அடையும் வழிகளென்றும் வலியுறுத்தியுள்ளார். இவரை மக்கள் சர்வமதப் பிரியனென்றே அழைப்பார்கள்.

பிறப்பு:- இயேசு பிரான் பெத்தலகாமில் கி.மு. 7ம் ஆண்டு பிறந்தார் என்று கணித்துள்ளார்கள். சத்ய சாயி பாபா புட்டபர்த்தியில் 23.11.1926ம் ஆண்டு பிறந்துள்ளார். இருவரின் பிறப்புகளும் உடற்புணர்ச்சியாலல்ல வென்றும், பரிசுத்த ஆவியின் மூலமே தாய்மார் கருத்தரித்தார்கள் என்றும் அறிகிறோம். இதில் இருவருக்குமுள்ள ஒற்றுமையை அறியலாம்.

பிள்ளைப் பருவம்:- இருவரும் பெற்றோர்களை மதித்து, ஆன்மீக ஞானமுள்ளவர்களாகவும் கருணை உள்ளம் கொண்டவர்களாகவும் திகழ்ந்தார்கள். இயேசு பிரான் 12 வயதில் ஜெருசலேம் கோவிலில் பல கேள்விகள் கேட்டு குருமாரை அதிசயிக்க வைத்தார். சத்யசாயி பாபாவையும் அவரைச் சேர்ந்த சிறுவர்கள் அவரை ஞானியென்றே அழைத்தார்கள்.

சத்யசாயி பாபா 20.10.1940 இல், பாடசாலை, வீடு, உறவினர்கள் யாவற்றையும் துறந்து தனது தெய்வீகப் பணியை ஆரம்பித்தார். இயேசுபிரான் 12 வயதிற்குப் பிற்பாடு 30ஆவது வயதில் தான் ஜெருசலேம் திரும்பி போதிக்கத் தொடங்கினார். இந்த 28 வருடங்களில் என்ன செய்தாரென்பதை விவிலிய நூலில் குறிப்பிடப்படவில்லை.

அவர் தெய்வீகத்தை அனுபவிக்க வனாந்தரங்களிலும் இமயமலை ஆச்சிரமங்களிலும் காஷ்மீர், திபெத், பேர்ஷியா ஆகிய இடங்களுக்குச் சென்று உச்ச நிலையை அடைந்தார் என்றும் சத்ய சாயி பாபா கூறியுள்ளார். அங்கு புத்த ஞானிகளுடன் தொடர்பு ஏற்பட்டிருக்கலாமென்றும் ஊகித்துள்ளனர்.

30ஆவது வயதில் இயேசு பிரான் யோவான் பப்ரிஸ்ரினால் **(John the Baptist)** ஞானஸ்நானம் செய்யப்பட்டார். பின்பு மூன்று வருடங்கள் வரை தீவிரமாக போதனைகளில் ஈடுபட்டார். இக்காலத்தில் 12 சீடர்கள் பின் தொடர்ந் தனர்.

சத்ய சாயி பாபா, இயேசு பிரானின் வாக்குகளை - நான் தேவனின் தூதன், நான் தேவனின் மகன், நானும் தேவனும் ஒன்று - ஆன்மீக வளர்ச்சியின் நிலைகளென்று உதாரணம் காட்டியுள்ளார். இயேசுபிரான் சகலரையும் ஒளிமிளிர்ந்தவர்களாக வரவேண்டும் என்று உத்வேகம் அளித்தார்.

இயேசுபிரான் தனது சீடர்களின் பாதங்களைக் கழுவி, எப்படி சேவக மனப்பாங்குடன் மக்களுக்கு பணியாற்ற வேண்டுமென்று, சீடர்களுக்குச் செய்து காட்டினார்.

இயேசு பிரான் பெற்றோரைக் கனம் பண்ண வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார். சத்ய சாயி பாபா வேத வாக்கான தாய் தெய்வம், தந்தை தெய்வம், ஆசிரியர் தெய்வம், விருந்தாளி தெய்வம் என்பவற்றை வலியுறுத்தியுள்ளார்.

இயேசுபிரான் தன்னைப் பின் தொடரும் சனக்கூட்டத்தைக் கண்டு கலிலியோ கடற்கரையிலுள்ள மலைச் சரிவில் ஏறி அங்கே உட்கார்ந்தார்.

இயேசு பிரான் மத்தேயு 15இல் "மனிதனுடைய வாய்க்குள் போவது அவனை அசுத்தம் ஆக்காது. ஆனால் அவனது வாயிலிருந்து வெளியே வருவது எதுவோ அதுவே அவனை அசுத்தம் ஆக்கும்" என்றார். அவர் பேதுரு கேட்டதற்கு விளக்கம் கொடுத்தார். வாயினுள் போவது எல்லாம் வயிற்றினுள் சென்று வெளியே போய்விடுகிறது. வாயிலிருந்து வெளியே வருகின்றவை இதயத்தில் இருந்தே வருகின்றன. இதிலிருந்தே தீய சிந்தனைகள் எழுகின்றன" என்றார். சத்ய சாயி பாபா உட்போகும் உணவே எண்ணத்தை நிர்ணயிக்கிறது. ஆகவே மாமிசம், மது அருந்துதல், புகைத்தல் ஆகியவற்றை விடவேண்டும். உட்செல்லும் உணவு என்றால் எமது புலன்கள் ஊடாக உட்செல்லும் அனைத்தையுமே குறிக்கிறது என்று விளக்கம் கொடுத்தார்.

இயேசுபிரான் மத்தேயு 23இல் தனது முக்கிய இரண்டு கட்டளைகளைக் கூறியுள்ளார். முதலாவது "இறைவனிடத்தில் இதயபூர்வமாக அன்பாயிரு, இரண்டாவது நீ உன்னில் அன்பாயிருப்பது போல் அயலவனிலும் அன்பாயிரு" என்பனவேயாகும். சத்யசாயி பாபா எல்லோரும் தெய்வீகமானவர்கள். இறைவனே எங்கும் உள்ளார். மற்றவனில் இறைவனைக் காண வேண்டும். ஆகவே தன்னல மற்ற சேவையைத் தெய்வீக அன்புடன் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி யுள்ளார்.

இயேசு பிரானைக் கடவுளை நிந்திப்பவராக சாட்சிகள் ஏற்படுத்தி சிலுவையில் அறைந்தார்கள். எவ்வளவு துன்பத்தின் மத்தியிலும் தன்னைத் துன்பப்படுத்துவோரை ஆசீர்வதிக்கும்படி பிதாவைக் கேட்டுக் கொண்டார். இதுதான் மன்னிப்பின் உச்சநிலையாகும். சத்யசாயி பாபாவும் எவ்வளவோ வியாதிகளுக்கு ஆளாகினார். பலரின் வியாதிகளைக் குணமடையச் செய்த தெய்வீக மகான்கள் தங்களுக்கு ஏற்பட்ட வியாதி, விபத்து, துன்பத்தில் இருந்து விடுபட தங்களது தெய்வீக சக்தியை உபயோகிப்பதில்லையென சத்யசாயி பாபா கூறியுள்ளார்கள்.

இயேசுபிரான் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு கல்லறையில் அவரின் உடம்பு ஒரு சேலையால் சுத்திவர மூடப்பட்டது. அச்சேலையில் அவரின் முகம் பதிந்திருந்தது. **(Shroud of Turin)** இதைப் பின்பு படம் எடுத்து சத்யசாயி பாபா முன்னிலையில் காட்டப்பட்டபோது, அவர் அப்படத்தை தனது சக்தியால் சீராக்கிக் கொடுத்தார். அதன் புகைப்படங்கள் உள்ளன. கடைசியாக இயேசுநாதர் தனது பிதாவைச் சென்றடைந்தார். இயேசுநாதர் சிலுவையிலிருந்த ஒரு சின்னத்தை சாயிபாபா தனது சக்தியால் படைத்து ஜோன் ஹிஸ்லொப் என்பவருக்குக் கொடுத்தார். அவர்கள் அதைப் பெரிது படுத்தி படமாக எடுத்துள்ளார்கள். சிலுவைச் சின்னத்திற்கு சாயிபாபா கொடுத்த விளக்கம் யாதெனில், மேல் கீழான கோடு அகங்காரத்தைக் குறிக்கிறதென்றும் குறுக்கேயுள்ள கோடு அதை அழித்தால் பிதாவை அடையலாம் என்பதேயாகும்.

1996 கிறிஸ்மஸ் தினத்தன்று சத்ய சாயி பாபா ஒரு மிகச் சிறிய புத்தகத்தை வரவழைத்துக் காட்டினார். 1530 கி.பி. வருடங்கள் வரை கிடைத்த சகல தகவல்களும் அப்புத்தகத்தில் உள்ளது. இது இங்கிலாந்திலுள்ளது. ரஷ்சியர்கள் இதை சிறிய புத்தகமாக மாற்றி கருங்கடலிலுள்ள ஆர்மேனியாவில் ஜெனீவாவிலுள்ள காட்சியகத்தில் வைத்துள்ளார்கள். இதில் பக்கங்களைக் குறிக்கும் நூல்களில் ஏனைய மதங்களில் இருந்து குறிப்புகள் அச்சடிக்கப்பட்டுள்ளன.

1993ஆம் ஆண்டு அன்பன் பீற்றர் பிப்ஸ் **(Peter Phipps)** சத்ய சாயி பாபாவிடம் தங்களின் செய்தியை எவ்வாறு கிறிஸ்தவ மக்களிடம் அறிவிக்கலாம் என்று கேட்டபோது அவர் சொன்னார்.

"சாயி பாபாவைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. இயேசுபிரானைப் பற்றிச் சொல். இயேசு எங்கும் வியாபித்திருக்கும் அன்பையே போதித்தார் என்று சொல். கிறிஸ்தவ மக்கள் பல குழுக்களாகப் பிரிந்துள்ளார்கள். ஒவ்வொரு குழுவும் தாங்கள் சொல்வதே சரியென்று நினைக்கிறார்கள். அவர்கள் இறைவனைச் சிறிதாக்கிக் கொள்கிறார்கள். இயேசு பிரான் பிரபஞ்சத்திற்கே உரியவர் என்பதை மறக்கக்கூடாது".

**டாக்டர் R. கணேசமூர்த்தி, யாழ்ப்பாணம்.**

# இறக்குமதி ஆடைகளுக்கு விசேட வரி?

(கொழும்பு)

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இறக்கு மதி ஆடைகளுக்கு விசேட வரியொன்றை அறவிட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

உள்நாட்டு தைத்த ஆடை உற்பத்தியை பாதுகாப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தைத்த ஆடைகளுக்கு விசேட வரியொன்றை அறிமுகப்படுத்த நாம் எதிர்பார்த்துள்ளோம்.

உள்நாட்டு தைத்த ஆடை வர்த்தகர்களை பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.

குறைந்த தரத்தினை கொண்ட தைத்த ஆடை இறக்குமதியை முற்றாக நிறுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

200 ரூபாவில் இருந்து 450 ரூபா வரை அதிகரிக்கும் வகையான வரி முறையொன்றை எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# திரையரங்குகளை திறக்க அனுமதி

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள திரையரங்குகள் வரையறுக்கப்பட்ட ஆசனங்களுடன் ஜனவரி முதலாம் திகதி முதல் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

25 சதவீத இருக்கை வசதியுடன் திரையரங்குகள் இயங்கும் என்று தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எனினும், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள திரையரங்குகள் மீண்டும் திறக்க அனுமதிக்கப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் காரணமாக அனைத்து திரையரங்குகளையும் மூட அரசாங்கம் ஒக்டோபரில் முடிவு செய்தது.

கொரோனா தொற்று நோயால் தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கும் திரையரங்குகள் மூடப்பட்ட இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

நாட்டில் முதல் கொரோனா வைரஸ் பரவலின் போது திரையரங்குகள் ஆரம்பத்தில் மார்ச் 14 முதல் தற்காலிகமாக மூடப்பட்டன.


இந்நிலையில், கடுமையான சுகாதார வழிகாட்டுதலின் கீழ் ஜூன் 27 முதல் திரையரங்குகளை மீண்டும் திறக்க அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்படும்

## கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

**(கொழும்பு)**

**ஒரு வருடத்திற்கு முன்னர் உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற கொடூரத் தாக்குதலின் கடுமையான வலிகளை சுமந்தவாறே இந்த நாட்டின் கிறிஸ்தவ மக்கள் நத்தார் பண்டிகையை கொண்டாடுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



ஆயினும் கூட, அந்த அச்சங்களையும் பாதுகாப்பற்ற தன்மையையும் அகற்றுவதற்கும், அச்சம், சந்தேகம் இல்லாமல் அனைவரும் சமயக் கிரியைகளில் ஈடுபடுவதற்கான சூழலை உருவாக்குவதற்கும் எமக்கு முடிந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியும் அவ்வாறே வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ் தினத்தையொட்டி நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உலகெங்கிலும் உள்ள கோடிக் கணக்கான கிறிஸ்தவர்களின் உள்ளங்களில் இறைவன் மீதான பக்தியுணர்வை தூண்டும் இயேசு கிறிஸ்துவின் பிறப்புடன் தொடர்புடைய நத்தார் பண்டிகையானது உயிர்ப்பு விழாவுக்கு அடுத்ததான உன்னதமான சமயப் பண்டிகையாகும்.

இது இயேசுநாதர் போதித்த மற்றும் நடைமுறையில் வாழ்ந்து காட்டிய அமைதி, அன்பு, இரக்கம், சகவாழ்வு, கருணை போன்ற பண்பட்ட மனித சமூகத்தின் அடித்தளத்தை வடிவமைக்கும் உன்னத பெறுமானங்களை உள்ளடக்குகிறது. சமூக ரீதியாக, நத்தார் கிறிஸ்தவ குடும்பங்கள் ஒன்று கூடுவதற்கும், பரிசுகளை பரிமாறிக்கொள்வதற்கும், பகைமைகளை மறந்து பிணைப்பினை புதுப்பிப்பதற்குமான ஒரு மகிழ்ச்சியான சந்தர்ப்பமாகும்.

இயேசு பிரான் போதித்த சமய நெறிகள் சமூகத்தின் நிலைத்தன்மைக்கு பங்களிக்கும் பல போதனைகளை கொண்டுள்ளது. பாவத்தின் இருளகற்றி, புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு சகோதர வாஞ்சையுடன் உதவுவது மற்றும் அனைத்து மனிதகுலத்தின் மீட்பிற்கான அர்ப்பணிப்பு என்பவை இவற்றில் முதன்மையானவை என்று நான் எண்ணுகிறேன். கொவிட் -19 தொற்று நோய் நிலைமைகளுக்கு மத்தியில் பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக செயலற்றிருக்கும் உலகை மீண்டும் எழுச்சி பெறச்செய்ய இந்த நன்னெறிகளை பயன்படுத்திக் கொள்ள முடியும் என குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# பாணி மருந்தில் சிக்கியிருக்காது ஊசி மருந்தை இறக்குமதி செய்யுங்கள்

(கொழும்பு)

கொரோனாவைரஸை கட்டுப்படுத்தவென தயாரிக்கப்பட்ட பாணி மருந்தில் சிக்கி இருப்பதற்குப் பதிலாக அரசாங்கம் கூடிய விரைவில் ஊசி மருந்தை நாட்டுக்கு இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செய்ய வேண்டிய வேலைகளைப் புறம் ஒதுக்கி வைத்து விட்டு, செய்யக்கூடாத வேலைகளில் சிக்கிக் கொண்டிருப்பதே தற்போது நடைபெறுகிறது.

நோய் ஒன்று குணமடைந்தால் நல்லது. ஆனால் பாணியில் குணமடையுமா? என்பதை விஞ்ஞான ரீதியான பரிசோதனை செய்து தீர்மானிக்க வேண்டும்.



பாணியால் குணமடையாது போனால் என்ன செய்வது, இதனால் குணமடையும் என்பதை உறுதிப்படுத்திய பின்னர் அதனை வழங்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மன ஆரோக்கியம்

சேர் நமக்கு முன்னால் நமக்கு வேண்டிய ஒருத்தர் ஒரு கிளாசில் நமக்கு பழச்சாறு கொண்டு வந்து வைக்கின்றார் என்று வைத்துக் கொள்ளு ங்கள்..உடனே நாம் என்ன செய்வோம்..எடுத்து கிடு கிடு என்று சாப்பிடுவோம்– அடுத்தவர்கள் யாரும் வருவதற்குள்ளே.

அதை விட்டுவிட்டு அதை கொண்டு வந்து வைத்துக் கொண்டே அதனுடைய விலை என்ன? என்று கேட்டிருப்போம்.நாம் கேட்க மாட்டோம்.. ஆனால் காந்திஜி அப்படி கேட்டார்.எப்பொழுது தெரியுமா? 1935 இல்.

அந்த வருடம் மே மாதத்தில் ஒரு நாள் காந்திஜி டில்லியில் இருந்தார். அப்பொழுது அவருக்கு இரண்டு டம்ளர் மாம்பழச் சாறு கொண்டு வந்து கொடுத்தார்கள்.இதனுடைய விலை என்ன? என்று கேட்டார். காந்திஜி மனுபென் காந்தியிடம்.

காந்திஜிக்கு உதவி செய்வதற்காக அவருடன் இருந்தவர்கள் இல்லையா அந்த அம்மா? அவர்களிடம் தான் கேட்டார்.காந்திஜி சும்மா வேடிக்கைக்காக இப்படி கேட்கின்றார் என்று நினைத்துவிட்டார்கள்.. அந்த அம்மா..அதுவுமில்லாமல் அதனுடைய விலையைக் கேட்டால் காந்திஜி நிச்சயமாக அதைச் சாப்பிட மாட்டார் என்கின்ற பயம் வேறு அதனால் அந்த அம்மா பதில் எதுவும் சொல்லாமல் கம் என்று இருந்து விட்டார்கள்.

கொஞ்ச நேரம் ஆகிவிட்டது.அந்த பழச்சாறு வைத்த இடத்திலே அப்படியே இருந்தது. காந்திஜி அதைச் சாப்பிடவில்லை. மனுபென் காந்தி பார்த்தார்கள். மெதுவாக காந்திஜியிடம் போய் அதை சாப்பிடுங்களேன்..என்றார்கள்.

பழச்சாறு விலை என்ன என்று கேட்டேன். அதற்கு பதில் இல்லை. அது முதல் தப்பு. பதிலை எதிர் பார்த்திருந்தும் அதைப்பற்றி விசாரிக்கவில்லை.அது இரண்டாவது தப்பு! இப்படி இரண்டு தப்புக்களைச் செய்து என்னிடம் வந்து இதை சாப்பிடுங்கள்..என்று சொன்னால் அது எப்படி? என்றார் காந்திஜி.

மனுபென் காந்தி என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தார்கள்.காந்திஜி தொடர்ந்து சொன்னார். இப்பொழுது என் முன்னால் வைத்திருக்கின்ற இந்த பழச்சாறு விலை சுமாராக 1/2 ரூபாயாவது இருக்கும்.

இந்த பழச்சாறு இல்லாமல் கூட என்னாலே இருக்க முடியும். ஆனால் அவசியமான பொருட்களை வாங்குவதற்குக் கூட சக்தியில்லாத மக்கள் இந்த நாட்டிலே நிறைய பேர் இருக்கின்றார்கள். அப்படி இருக்கின்ற பொழுது எனக்கு எதற்கு இந்த விலை உயர்ந்த பானம்?

இதை இப்பொழுது நான் சாப்பிட்டால் என் உடல் வேண்டும் என்றால் ஆரோக்கியமாகலாம். ஆனால் என் மனது அமைதி அடையாது. எனக்கு என்னுடைய உடல் ஆரோக்கியத்தை விட மன ஆரோக்கியம் தான் முக்கியம்.அதனால் இதை நான் சாப்பிட மாட்டேன்..எடுத்துக் கொண்டு போய்விடு.. என்றார்.அந்த சமயத்திலே ஓர் அகதிப் பெண் இரண்டு குழந்தைகளோடு காந்திஜியைப் பார்ப்பதற்கு வந்து வணக்கம் சொன்னார்.

காந்திஜி உடனே தனக்கு முன்னால் இருந்த பழச்சாற்றை எடுத்து அந்த பெண்ணிடமும் குழந்தைகளிடமும் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். அவர்கள் அதை வாங்கி மிகவும் சந்தோசத்தோடு சாப்பிட்டார்கள்.

அதைப் பார்த்த காந்திஜி முகத்திலே ஒரு புன்னகை–ஒரு பரவசம்–ஒரு திருப்தி அவர் மனது நிறைந்திருந்தது அப்பொழுது அவர் சொன்னார்.

ஆண்டவன் எனக்கு எப்பொழுதும் சரியான சமயத்திலே கை கொடுப்பார் என்பதற்கு இதுவே அத்தாட்சி.. நான் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கின்ற பொழுது கூட கடவுளின் கருணையால் அந்த சூழ்நிலை என்னை பாதிக்கவில்லை.

என் கூட இவ்வளவு நாள் பழகியும் கூட இங்கே இருக்கின்றவர்கள் எனக்கு அதிக விலையுள்ள பழரசத்தை கொடுத்தார்கள். ஆனால் சரியான நேரத்திலே அதைச் சாப்பிட வேண்டியவர்களை என்னிடம் அனுப்பி வைத்து என்னை சந்தோசப்படுத்தினார். கடவுளுக்கு நன்றி என்றார் காந்திஜி.

உடல் ஆரோக்கியத்தை விட மன ஆரோக்கியம் தான் எனக்கு முக்கியம் என்று சொன்னார் பாருங்க. அதை நாம் எல்லோரும் மனப்பூர்வமாக இன்றைக்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த காலத்திலே எல்லோரும் அப்படியா நினைக்கின்றார்கள்.

எனக்குத் தெரிந்த ஒருத்தர் இருக்கின்றார். தினமும் காலையில் அவர் தேநீர் குடிக்கும் நேரத்தில் பக்கத்து வீட்டுக்காரர் வந்து சேர்வார். கரெக்டா உடனே அவரும் தனக்கு என்று வைத்திருக்கின்ற தேநீரை எடுத்து மனப்பூர்வமாக பக்கத்து வீட்டுக்காரரிடம் கொடுத்துவிடுவார்.அதற்குப் பின்பு அவருக்காக வேறு தேநீர் போட்டுக் கொண்டு வந்து கொடுத்தாலும் வேண்டாம் என்று விடுவார். ஆண்டவனாக பார்த்து சரியான நேரத்திலே அவரை எங்கள் வீட்டுக்கு தினமும் அனுப்பி வைக்கின்றார் என்பார்.ஏன் அப்படிச் சொல்கின்றீர்கள் என்று கேட்டேன் .

ஒரு நாள். எனக்கு என்னுடைய உடல் ஆரோக்கியம் தான் முக்கியம். இதை கடவுள் புரிந்து கொண்டு எங்கள் வீட்டுத் தேநீரைக் குடிப்பதற்கு தினமும் அடுத்த வீட்டுக்காரரை அனுப்பி வைக்கின்றார் என்றார் அவர்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

29



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

விவாதத்தின் இக்கட்டத்தில் ஓர் உறுப்பினர் ஒரு சந்தர்ப்பத்திற்கு மேல் பேச நிலையியற் கட்டளை இடமளிக்கின்றது.

அனைத்து அமைச்சுக்களினதும் கணக்குவாக்குகள் முழுச்சபையின் குழு நிலையில் நிறைவேற்றப்பட்டதும் பாராளுமன்றமானது உடனடியாக ஒரு சபையாக மீண்டும் அமரும். அப்போது சபாநாயகர், குறித்த ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலமானது திருத்தங்களுடனோ அல்லது திருத்தங்களின்றியோ நிறைவேற்றப்பட்டதாக அறிவிப்பார்.

நிறைவேற்றப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலமானது அடுத்த கலண்டர் ஆண்டின் தொடக்கமான ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து பொதுச் சேவைகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதியைச் செலவழிப்பதற்கான அதிகாரத்தை அரசாங்கத்திற்கு வழங்குகின்றது.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டால் அரசியலமைப்பின் உறுப்புரை 48 (2) இன் பிரகாரம் அமைச்சரவை கலைக்கப்பட்டதாகக் கருதப்படும்.

**வரவு-செலவுத் திட்ட (ஒதுக்கீட்டுச்) சட்டமூலம் பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டால் அரசியலமைப்பின் உறுப்புரை 48(2) இன் பிரகாரம் அமைச்சரவை கலைக்கப்பட்டதாகக் கருதப்படும்.**

### பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவை

பாராளுமன்றத்தினால் 2018 மார்ச் மாதம் 7 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு, 2018 ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையின் நோக்கமானது பாராளுமன்றம், அவர்களின் தேர்தல் தொகுதி மற்றும் பொதுமக்கள் தொடர்பான தமது பொறுப்புடைமைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அவர்கள் தமது தத்துவங்களையும் பணிகளையும் மற்றும் கடமைகளையும் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் என்பவற்றிற்கு உதவுவதற்கு ஆகும்.

இந்நடத்தைக் கோவையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையின் நோக்கம், நடத்தைக் கோவையின் நோக்கெல்லை, உறுப்பினர்களின் கடமைகள், நடத்தைக் கோட்பாடுகள், நடத்தை விதிகள், உறுப்பினர்களின் நிதியியல் அக்கறைகளின் பதிவேடு மற்றும் அத்தகைய அக்கறைகளின் வெளியிடுகையும் வெளியீடும், உறுப்பினர்கள் பகிரங்க சொத்துக்களை பயன்படுத்துதலும் ஊக்குவித்தல்களும, வரவு, நடத்தை மற்றும் நற்பண்பு, நடத்தைக் கோவையைப் போற்றிக்காத்தல், முறைப்பாடுகள், புலனாய்வுகள் மற்றும் அமுலாக்கம், விசாரணை மற்றும் தண்டனைகளிற்கான நடவடிக்கைமுறை, அறிக்கையைச் சமர்ப்பித்தலும் கவனத்திற்கொள்ளலும், நடத்தைக் கோவையின் உருவாக்கமும் இற்றைப்படுத்தலும் போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமைகளைப் பொறுத்த வரையில் உறுப்பினர் ஒவ்வொருவரும் இலங்கைச் ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினை போற்றிப் பாதுகாப்பதற்கும் அரசின் ஒருமைப்பாட்டினை போற்றிக்காப்பதற்கும் 1 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தினால் தமக்கென நிர்வகிக்கப்பட்ட சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணத்தின் பயனைக் கொண்டு கடமையை புரிதல் வேண்டும். உறுப்பினர் ஒவ்வொருவரும் அடிப்படை உரிமை தொடர்பான சட்டத்தினை போற்றிக் காத்தல் வேண்டுமென்பதுடன் எல்லா நேரங்களிலும் தமது வாக்காளர்கள் தொடர்பில் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளை பிரயோகிப்பதிலும், புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் பாரபட்சமற்ற விதத்தில் செயலாற்றுதலும் வேண்டும். உறுப்பினர் ஒவ்வொருவரும் தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளை பிரயோகிப்பதில், புரிவதில் மற்றும் நிறைவேற்றுவதில் குறிப்பாக தமது வாக்காளர்களை நோக்கியும் பொதுவாக நாடு பற்றிய அக்கறையிலும் செயலாற்றுதல் வேண்டும். உறுப்பினர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் தம்மீது ஒப்படைக்கப்பட்ட பகிரங்க நம்பிக்கைக்கிணங்க செயலாற்றுதல் வேண்டும் என்பதுடன் எவையேனும் பொது வளங்களைப் பயன்படுத்துவது உட்பட அவர்களின் நடவடிக்கை எப்போதும் நேர்மையுடனும் ஒருமைப்பாட்டுடன் இருத்தல் வேண்டும்.

### பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களதும் தத்துவங்களும் சிறப்புரிமைகளும் சட்டம்

பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களதும் சிறப்புரிமைகளையும், விடுபாட்டுரிமைகளையும், தத்துவங்களையும் வெளிப்படுத்துவதற்கும், வரைவுபடுத்துவதற்கும் பாராளுமன்றத்தில் பேச்சு, விவாதம் அல்லது நடவடிக்கைகள் என்பவற்றுக்கான சுதந்திரத்தைப் பாதுகாக்கப் பெறுவதற்கும் பாராளுமன்றச் சிறப்புரிமை மீறல்களுக்கான தண்டனைக்கு ஏற்பாடு செய்வதற்கும், பாராளுமன்ற அறிக்கைகள், பத்திரங்கள், நிகழ்ச்சிக் குறிப்புகள், தீர்மானங்கள் அல்லது நடவடிக்கைகள் என்பவற்றை வெளியிடுவதில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்குமானதொரு சட்டம். இச் சட்டம் 1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டமாகும். 1978, 1980, 1984, 1987, 1997 ஆம் ஆண்டுகளில் திருத்தத்திற்கு உள்ளானது.

### பாராளுமன்றத்தை பார்வையிட மற்றும் அலுவலக நிமித்தம் வருபவர்களுக்கான தகவல்கள்

#### பொதுவான தகவல்கள்

பொதுமக்களில் யாரும் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் கலரிக்கு ஒரு குழுவாகவோ அல்லது தனியாகவோ எந்தவொரு அமர்வு அல்லது அமர்வற்ற நாளிலும் வரமுடியும். வருகைகள் அமர்வற்ற நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்கும் இடையில் 30 (முப்பது) நிமிடங்களுக்கும், எந்தவொரு அமர்வு நாளிலும் அமர்வு முடியும் வரையும் ஒழுங்கு செய்யப்படும்.

#### அமர்வு நேரங்கள்

பாராளுமன்றம் வேறு விதமாகத் தீர்மானித்தாலன்றி, மாதந்தோறும் முதலாவது ஞாயிற்றுக்கிழமையை அடுத்துவரும் வாரத்திலும் ஒன்றுவிட்ட அடுத்த வாரத்திலுமாக இரு வாரங்களில் பாராளுமன்றம் கூட வேண்டும். அத்தகைய முதலாவது, மூன்றாவது வாரங்களில் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பாராளுமன்றம் அமர்தல் வேண்டும். பாராளுமன்றம் வழக்கமாக சனிக்கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஏனைய விடுமுறை நாட்களிலும் கூடுவதில்லை. அத்துடன் வழக்கமாக பாராளுமன்ற அமர்வுகள், செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணி வரையிலும், வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 7.30 மணி வரையும் நடைபெறும். சில தினங்களில் பி.ப. 7.30 மணிக்குப் பின்னரும் அமர்வுகள் நீடிக்கப்படலாம். வரவு-செலவுத் திட்டக் காலப் பகுதியில், பொதுவாக ஒதுக்கப்பட்ட அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பின்னர் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.00 மணி வரையுமாக இருப்பதோடு, காலத்திற்குக் காலம் நேர மாற்றங்களுக்கு உட்படலாம்.

#### கலரிகளுக்கு வருகை தருவதற்கான அனுமதி

பொதுமக்கள் கலரிக்கு வருகை தருவதற்குப் படைக்கலச் சேவிதரிடமிருந்து அனுமதி பெறப்படல் வேண்டும். அவ்வாறான வேண்டுகோள்களை பாராளுமன்றத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதன் மூலமோ அல்லது விசாரணைப் படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்புவதன் மூலமோ மேற்கொள்ளலாம். வருகை தருபவர் அவருக்கான விசாரணையில் பின்வரும் விபரங்களை குறிப்பிட வேண்டும்.

1. வருபவர்களின் முழுப்பெயர்களும் விலாசங்களும்.
2. வருபவர்களின் தேசிய அடையாள அட்டை (NIC) இலக்கங்கள்.
3. வருகை தரும்திகதியும்நேரமும்.
4. வருகையின் நோக்கம்.
5. வருகை தருபவருடன் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்.

வருபவர்களின் விபரங்கள் முறைவழிப்படுத்தப்பட்டதும், படைக்கலச் சேவிதர் வருபவர்களின் வேண்டுகோளை உறுதிப்படுத்த அவர்களுடன் தொடர்பு கொண்டு பாராளுமன்றக் கட்டடத் தொகுதிக்குள் பிரவேசிப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பார்.

#### பாராளுமன்றத்தை பார்வையிட வருபவர்களுக்கான அறிவுறுத்தல்கள்

1. படைக்கலச் சேவிதரால் வழங்கப்பட்டதும் வருகை தருகின்ற தினத்தில் செல்லுபடியாகின்றதுமான பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கான அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு மாத்திரம் பார்வையாளர் கூடத்துக்கு பிரவேசிப்பதற்கு இடமளிக்கப்படும். எனவே, தங்களுக்கு படைக்கலச் சேவிதரால் பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்காக விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைத் தவறாமல் எடுத்துவர வேண்டுமென்பதோடு அதனை பாராளுமன்றக் கட்டடத்தை விட்டு நீங்கிச் செல்லும்வரை பாதுகாப்பாக வைத்திருக்கவும் வேண்டும்.

2. பாராளுமன்றத்தை பார்வையிட எதிர்பார்க்கும் விருந்தினர்கள் அதற்கான அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்கு பின்வரும் வழிகளில் படைக்கலச்சேவிதரிடம் விண்ணப்பிக்கலாம்.

- பாராளுமன்ற உறுப் பினரொருவர் ஊடாக.
- பாராளுமன்ற பணியாள் தொகுதியினர் அல்லது ஏனைய/ துணைச் சேவை அலுவகமொன்றைச் சேர்ந்த பணியாள் தொகுதியினர் ஊடாக
- பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலான "ஜயந்திபுர பாதுகாப்பு நுழைவாயிலில்" தாபிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திர கருமபீடத்துக்கு சமுகமளித்து சமர்ப்பிக்கப்படுகின்ற வாய்மூல/ எழுத்துமூல கோரிக்கை ஒன்றின் ஊடாக.
- **sa@parliament.lk** என்ற மின்னஞ்சல் ஊடாக
- 011 277 7473 / 011 277 7322 /011 277 7323 ஆகிய இலக்கங்களுக்கு தொலைநகல் அனுப்புவதன் ஊடாக
- படைக்கலச் சேவிதர், படைக்கலச் சேவிதர் திணைக்களம், பாராளுமன்றம், ஸ்ரீஜெயவர்தனபுர கோட்டே என்ற முகவரிக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற எழுத்துமூலமான கோரிக்கையொன்றின் ஊடாக.
- பாடசாலை சீருடையுடன் சமுகமளிக்கும் பாடசாலை மாணவர்களுடன் கூடிய குழுக்கள் சார்பில் ஏற்புடைய பாடசாலையின் அதிபரினால் பின்வரும் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுடன், படைக்கலச் சேவிதரிடம் மேற்கொள்ளப்படும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றின் ஊடாக.

(தொடரும்...)

# கைதுகள்

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சுகாதார ஆலோசனைகளை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் 54 நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் 1,794 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர். (ஐ-4)


(அநுராதபுரம்)

அநுராதபுரம் பகுதியில் தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறி சூதாட்டத்தில் ஈடுபட்ட 13 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவி லேயே இந்த கைது நடவடிக்கையானது இடம் பெற்றுள்ளது. கைதான நபர்கள் 24 முதல் 54 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன், அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர். (ஐ-4)

# ஆலய வழிபாடு

## ஏன்–எதற்கு – எப்படி



## திருநீறு ஏன் பூச வேண்டும்?

(தொடர்ச்சி)

நாம் தினமும் திருநீறு பூசுவதால் தலையில் உள்ள சிவன், நெற்றியில் மகேஸ்வரன், மார்பில் ருத்ரன், நாடியில் விஷ்ணு, முழங்காலில் பிரம்மா, புஜங் களில் விநாயகர், முருகன், முழங்கை களில் தேவேந்திரன், ஆதிசேஷன், மணிக் கட்டுகளுக்கு சரஸ்வதி, மகாலட்சுமி, விலா இரண்டும் வாமாதி சக்திகள், முதுகில் பிரஜாபதி, கண்டத்தில் பதி னாறு ருத்ரர்கள் இப்படி 16 இடங்களில் உள்ள அதிதெய்வங்கள் மிகவும் மகி ழ்ச்சி அடைவார்கள்.

எனவே 16 இடங்களில் தினமும் திரு நீறு பூசி ஈசனை வழிபடுபவர்கள் நாளு டைவில் சிறந்த சிவாலயம் போல மாறி விடுவார்கள் என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்.

ஆனால் பணி நிமிர்த்தமாகவும் சுற்றுச்சூழல் பொருந்தாத காரணத்தால் 99 சதவீதம் பேர் 16 இடங்களில் திருநீறு பூசிக்கொள்வதில்லை.

நெற்றியில் மட்டும் ஒரே ஒரு கோடு போன்று திருநீறு பூசிக் கொள்கிறார் கள். திருநீறு பூசுவது எப்படி என்பத ற்கு சில விதிமுறைகள் உள்ளன.

திருநீறு பூசுவதை உத்தூளனம், திரி புண்டரம் என்று இரு வகையாகப் பிரித் துள்ளனர். நெற்றியில் ஒரே ஒரு கோடு மட்டும் பட்டையாக பூசிக்கொள்வதை உத்தூளனம் என்பார்கள். உத்தூளனம், உத்தூளி என்றும் சொல்வதுண்டு.

திருநீற்றை தண்ணீரில் குழைத்து நெற்றியில் மூன்று வரிகள் போல பூசிக் கொள்வது திரிபுண்டரம் எனப்படும். சிவ தீட்சை பெற்றவர்கள் மட்டுமே இப்படி தண்ணீரில் குழைத்த திருநீறை பூசிக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் சாதார ணமாக திருநீறை பூச வேண்டும்.

ஒரு வேளை விபூதியைத் தண்ணீரில் குழைத்து பூச விரும்புபவர்கள் "ஈசான் மூர்த்தயே நம" என்று சொல்லி தலையி லும் "தத் புருஷ வக்த்ராய நம" என்று சொல்லி நெற்றியிலும் "அகோர ஹிரு தயாய நம" என்று சொல்லி தொப்புளி லும் "சத்யோஜாத மூர்த்தயே நம" என்று சொல்லி புஜங்களிலும் கை மூட்டுக் கள், மணிக்கட்டுக்கள், இடுப்பு கால் மூட்டுக்களில் பூசிக் கொள்ளலாம்.

அதுபோல நெற்றியில் 3 வரிப்பட்டை களாக திருநீறு பூச சில விதிகள் உள்ளன.

வலது கை நடு விரல்கள் மூன்றால் மட்டுமே 3 வரிகளாக திருநீறு பூச வேண் டும். அப்படி பூச இயலாவிட்டால் மோதிர விரல், நடு விரலால் இடமிருந்து வல மாக முதலில் இருபட்டைகள் தரித்து பிறகு நடுவிரலால் மூன்றாவது பட் டையை பூசிக் கொள்ளலாம். ஆணவம், கன்மம், மாயை ஆகிய 3 வகை அழுக்குகளையும் போக்கி விட்டோம் என்று இதற்கு அர்த்தமாகும்.

மூன்று வரிப்பட்டைகள் ஒரே மாதிரி இருக்க வேண்டும். மேடு, பள்ளமாக இருக் கக்கூடாது. 3 பட்டைகளுக்கும் இடை யில் சீரான இடைவெளி இருக்க வேண் டும்.

ஒரே ஒரு பட்டையாகப் பூசிக் கொள் பவர்கள் ஆள்காட்டி விரலால் திருநீறை எடுக்கவே கூடாது. மோதிர விரலால் மட் டுமே திருநீறு எடுக்க வேண்டும். ஏனெ னில் நம் உடல் உறுப்புகளில் மிகவும் பவித்ரமான பாகமாக "மோதிர விரல்" கூறப் படுகிறது. இந்த விரலுக்கு நம் வாழ் வைக் கட்டுப்படுத்தும் சூட்சுமம் உள் ளது. எனவே தான் மோதிர விரலால் எடுத் துத் திருநீறு பூச வேண்டும் என்கி றார்கள்.

திருநீறுப் பூசும் போது இடது பக் கப் புருவ எல்லை முதல் வலது பக்க புருவ எல்லை வரை பூச வேண்டும் என்பது விதியாகும். இந்த அளவு குறைவது நல்லது அல்ல என்கிறார்கள்.

ஆனால் திருநீறை விளக்கு, நாமம், பிறை, வட்டம் போன்ற வடிவங்களிலும் பூசிக் கொள்ளலாம். தவறில்லை என்று மற்றொரு குறிப்பில் கூறப்பட்டுள்ளது. திருநீறை சிறு கீறல் மற்றும் சிறு பொட்டு போலவும் வைத்துக் கொள்ளலாம்.

ஆனால் ஒருபோதும் ஏற்கனவே பூசப் பட்ட சந்தனம், குங்குமம் மீது திருநீறு பூசாதீர்கள். திருமணமான பெண்கள் குங் குமம் வைத்து அதற்கு மேல் பகுதி யில் திருநீறு பூசிக் கொள்வது மிகவும் நல்லது.

எப்போது திருநீறு பூசினாலும் தென் மேற்கு மூலையில் நின்றே பூச வேண் டும். அந்தச் சமயத்தில் நீங்கள் வடக்கு அல்லது கிழக்கு திசை நோக்கி நின்று திருநீறு பூசுதல் வேண்டும். ஒருபோதும் நடந்து கொண்டே திருநீறு பூசக் கூடாது.

இப்படி முறைப்படி தினமும் திருநீறு பூசிக் கொண்டால் இறை சிந்தனை யோடு வாழ வேண்டும் என்ற எண்ணம் மனதில் இருந்து கொண்டே இருக்கும். இந்த எண்ணம் அதிகமாகும் போது நம் உடல் முழுவதையும் இறைவன் காக் கின்றான் என்று மனம் உறுதிப்படும்.

இத்தகைய சிறப்பைக் கொண்ட திரு நீறால் நம் வாழ்வு எப்படியெல்லாம் மேன்மை பெறுகிறது என்பதை அடுத்துக் காண லாம். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## 45 முதியோருக்கு கொரோனா

(கொழும்பு)

கொழும்பு மோதரை பகுதியில் அமைந்துள்ள முதியோர் இல்லத்திலுள்ள 45 முதியோருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.மூலம் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக, கொழும்பு மாநகரசபையின் பிரதான வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்து ள்ளார். (ஐ-4)

## வீடொன்றில் தீ ஒருவர் உயிரிழப்பு

(ஹற்றன்)

ஹற்றன், ஆரியகம பகுதியில் வீடு ஒன்று தீப்பற்றி எரி ந்ததில் வீட்டில் இருந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்து ள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த குடும்பத்தில் உள்ளவர்கள் நத்தார் பண்டிகை யினை முன்னிட்டு பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக ஹற்றன் நகரத்திற்குச் சென்றிருந்த வேளை வீடு தீப்பற்றி எரிந்துள்ளது.

இதன்போது வீட்டில் இருந்த நபர் தீயில் சிக்கி பலியாகி யுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசார்ணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பி டத்தக்கது. (ஐ-4)

## பொலிஸாரின் இடமாற்றங்கள் ஒத்திவைப்பு


(கொழும்பு)

பொலிஸாரின் வருடாந்த இடமாற்றங்கள் ஒத்திவைக் கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக 2021 ஜனவரி 15 ஆம் திகதி திட்டமிடப்பட்ட இந்த இடமாற்றங்கள் மார்ச் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுகளை பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரட்ன நேற்று முன்தினம் பிறப்பித்தார். (ஐ-4)

## தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு



(கொழும்பு)

கிறிஸ்மஸ் பண்டிகை விசேட ஆராதனைகள் இடம் பெறுவதால், கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அதன்படி நேற்று முன்தினம் இரவில் இருந்து வழிபாடுகள் இடம்பெறும் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு இவ்வாறு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஏப்ரல் 21 ஆம் திகதி நாட்டின் பல கிறிஸ்தவ தேவாலயங்களிலும் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டி ருந்தன.

இந்தத் தாக்குதல்களில் 250 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதுடன், 500 இற்கும் மேற்பட்டவர்கள் காயம டைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)



# சிறுவர் அரங்கம்

## சோம்பேறிகள் எத்தனை பேர்

ஒரு நாள் சந்தை கூடும் இடத்தில் ஒரு உயர்ந்த இடத்தில் முல்லா ஏறி நின்று கொண்டு, முல்லா, மக்களைப் பார்த்து, அன்பார்ந்த நண்பர்களே! உங்களில் எத்தனை பேருக்கு உடல் உழைப்பு இல்லாமல் வீட்டில் இருந்தவாறே ஆயிரக்கணக்கில் சம்பாதித்து சுகபோக வாழ்வு வாழ வேண்டுமென்று ஆசைப்படுகிறவர்களுக்கு நான் ஒரு வழி சொல்கிறேன்.

யாரெல்லாம் என்னுடைய யோசனைகளைக் கேட்க தயாராக இருக்கிறீர்களோ அவர்கள் மட்டும் கைதூக்குங்கள் என்றார், முல்லா.

அங்கே இருந்த அத்தனை பேரும் கை தூக்கினார்கள். முல்லா தாம் நின்றிருந்த இடத்தை விட்டுக் கீழிறங்கி நடக்கத் தொடங்கினார்.



என்ன முல்லா அவர்களே, ஒன்றும் சொல்லாமல் செல்லுகிறீர்களே? என்று மக்கள் கேட்டனர்.

நண்பர்களே! நமது ஊரிலே எத்தனை சோம்பேறிகள் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பினேன்.

என்னையும் சேர்த்து இந்த ஊரில் உள்ள எல்லோருமே சோம்பேறிகள் தான் என்ற உண்மை எனக்கு தெரிந்துவிட்டது.

இனி எனக்கு இங்கே என்ன வேலை? போய் வருகிறேன் என்று கூறியவாறே முல்லா செல்லத் தொடங்கினார்.

அங்கிருந்த மக்கள் திகைப்படைந்தவர்களாக முல்லா சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

**நீதி :**
**உழைத்து வாழ வேண்டும். சோம்பேறிகளாக இருக்கக்கூடாது.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சென்றதில்லையா? வென்றதில்லையா?

தேவைப்பட்டால் அலெக்சாண்டரைப் பற்றி பார்மீனியோவும் தெரிந்துகொள்ள முடியும். பார்மீனியோவின் நடவடிக்கைகளை இரகசியமாக அலெக்சாண்டர் தெரிந்து கொள்ள முடியும்.

எல்லோரும் நம்பிக் கைக்குரிய நபர்கள். செயல்வீரர்களும் கூட.

அலெக்சாண்டரின் படையில் இன்னொரு வித்தியாசமான சங்கதி இருந்தது. இராணுவப் பயிற்சிகள் எதையும் அறிந்திராத சில நபர்கள் தளபதிகளாக நியமனம் செய்யப்பட்டிருந்தார்கள்.

ஏன்? மூளைக்கு வேலை என்ற அடிப்படையில் மட்டுமே அவர்களுக்கு அந்த அங்கீகாரம். சுருக்கமாகச் சொன்னால் அவர்கள் எல்லாம் நல்ல மேய்ப்பர்கள். வீரர்களிடம் எப்படி வேலை




வாங்குவது என்கிற வித்தை தெரிந்த ஆசாமிகளுக்கு இந்த வாய்ப்புகள் கிடைக்கும்.

சில சமயங்களில் அலெக்சாண்டரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள், தலைமைப் பண்புகள் நிறைந்த உறவினர்கள் போன்றோருக்கும் இந்த வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. ஆனால் அவர்களில் யாரும் சோடை போனதில்லை என்பது வரலாறு.

பல மொழிகளைப் பேசுபவர்கள் படைகளில் இருந்ததால் உத்தரவுகள் எல்லாம் பெரும்பாலும் கிரேக்க மொழியிலேயே வழங்கப்பட்டன. இதனால் வீரர்கள் ஒவ்வொருவரும் கிரேக்க மொழியைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பது கட்டாயம். அப்படித் தெரியாதவர்களுக்கு உரிய மொழிப் பயிற்சியளிக்கப்பட்டது.

யுத்த சமயங்களில் எப்படி நகர வேண்டும்? யாரைத் தாக்கவேண்டும்? என்பதெல்லாம் வாய்மொழி உத்தரவுகளாக மட்டுமே இருக்கக்கூடாது என்பதில் அலெக்சாண்டர் தெளிவாக இருந்தார். இதற்கென பிரத்தியேக சமிக்ஞைகள் உருவாக்கப்பட்டன.

இடையிடையே சத்தம் எழுப்புவது, இசைக் கருவிகளைக் கொண்டு ஓசை எழுப்புவது, கைகளைத் தட்டுவது, கால்களைத் தரையோடு உராயச் செய்து ஓசை எழுப்புவது, ஈட்டிகளை ஒன்றோடொன்று உரசி ஓசை எழுப்புவது எல்லாமே சில உத்தரவுகளைப் புரிந்து கொள்வதற்கு உதவியாக இருந்தன. (தொடரும்)

எழுந்து நில்லுங்கள். தைரியமாயிருங்கள். பலமுடையவராகுங்கள். முழுப் பொறுப்பையும் உங்கள் மீதே சுமத்திக் கொண்டு உங்களது சொந்த விதியைப் படைத்தவர் நீங்களே என்பதை அறியுங்கள். -விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சுனாமியும் கொரோனாவும் கற்பிக்கின்ற பாடங்கள்

2004ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி சுனாமி எனும் ஆழிப் பேரலை மனித உயிர்களைக் காவு கொண்ட நாள்.

ஆம், மனிதப் பேரவலத்தை ஏற்படுத்திய ஆழிப்பேரலை நடந்து இன்று 16 ஆண்டுகள் ஆயிற்று.

அந்தோ! அதிகாலைப் பொழுது. மக்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை, கடலலை பேரலையாய் மிரண்டெழுந்து மனித உயிர்களைத் தேடித் தேடிக் காவு கொண்டது.

ஆழிப்பேரலையின் கோரப் பிடிக்குள் கொத்துக் கொத்தாக மக்கள் அகப்பட்டுக் கொண்ட துயரம் எஇந்த உலகப் பிரபஞ்சம் உள்ளவரை ஆறப் போவதில்லை.

16ஆம் ஆண்டு நினைவில் ஆழிப் பேரலையில் மரணித்த அத்தனை பேரின் ஆத்மாவும் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

தவிர, அமைதியாக இருந்த கடல் பெருங்கோபங் கொண்டு ஆழிப் பேரலையாய் வெகுண்டெழுந்ததற்கு; அணுவாயுதப் பரிசோதனைகளின் மைதானமாகக் கடல் பரப்பு ஆக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட இயற்கையின் சீற்றமே ஆழிப்பேரலை என்பதாயிற்று.

என்ன செய்வது மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்காக இப் பிரபஞ்சத்தை ஆக்கி அருளிய இறைவனை இயற்கையின் வடிவமாகப் பார்க்காமல், மனித குலத்தை அழிப்பதற்கான போராயுதங்களை இப்பூமி மீது வெடிக்கவும் மனித உயிர்களைத் துடிக்கவும் வைத்த ஈனச் செயலால் இயற்கை கடும் சீற்றம் கொள்கிறது.

அதி உச்சமாகக் கோபம் கொண்ட இயற்கைக்கு; எய்தவனைத் தெரியாததால், அப்பாவி மக்கள் மீது தன் கோபத்தைக் கொட்டித் தீர்த்தது.

16 ஆண்டுகளுக்கு முன் நடந்த சுனாமி தந்துபோன மனிதப் பேரவலத்தால் இன்னமும் கண்ணீர் வற்றாது ஓடுகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போது கொரோனாத் தொற்று மனித குலத்தை ஒரு கை பார்ப்பது எனக் கங்கணம் கட்டி நிற்கிறது.

என்னே கொடுமை! மனித உயிர்களைக் காவு கொள்ளும் கோவிட் – 19 இல் இருந்து மனித குலம் எங்ஙனம் மீண்டெழப் போகிறது என்ற ஏக்கம் நீண்டு செல்கையில்,

லண்டனில் வலிமை பெற்ற கொரோனா வைரஸ் தொற்றுக் கண்டறியப்பட்டுள்ளதாம்.

என்ன செய்வது விஞ்ஞானம், அறிவியல் தொழில்நுட்பம் என்ற பேரால் இயற்கையை நிந்தித்துவிட, இப்போது இயற்கை மனித வாழ்வுக்கு இனி இடம் கொடுக்க முடியாது எனத் திடசங்கற்பம் கொண்டுள்ளது.

ஆம், உலகம் முழுவதையும் உலுப்பி நிற்கும் சுனாமியும் கொரோனாவும் கற்றுத் தருகின்ற பாடங்கள் என்ன? என்பதை இனியேனும் இந்த வையகம் உணர்ந்தாக வேண்டும்.

## கொரோனாவால் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால்
# மாணவர்களுக்கு எதிரான வன்முறை இலங்கையில் அதிகரிப்பு – யுனிசெப்

(கொழும்பு)

இலங்கையில்கொரோனாப் பரவல் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால் மாணவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதாக யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது.

வழமையான வன்முறைச் சம்பவங்களை விட 40 வீதம் அதிகரித்துள்ளதாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு மார்ச் முதல் ஓகஸ்ட் வரையான காலப்பகுதியில் இலங்கையில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காக பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும், இலங்கை மாத்திரமன்றி உலகம் முழுவதும் தொலைதூரக் கல்வி முறையினால் விளக்கமளித்தல் மற்றும் கலந்துரையாடும் சந்தர்ப்பம் இல்லாமையும் சில மாணவர்களுக்கு இணையத்தள வசதி இல்லாமையும் வன்முறைகள் அதிகரிப்புக்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலை போசாக்கு வேலைத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாலும் மாணவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதாக யுனிசெப் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)

## கிழக்கில் நான்காவது கொரோனா மரணம்

(கல்முனை)

கிழக்கு மாகாணத்தில் நான்காவது கொரோனாத் தொற்று மரணம் பதிவாகியுள்ளதாக கல்முனை பிராந்திய சுகாதார பணிமனை பணிப்பாளர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.

"நேற்று முன்தினம் 54 வயதுடைய அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பொது மகன் நெஞ்சுவலி காரணமாக அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

குறித்த நபருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இவ்வாறு வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுக்கொண்டிருந்த அவர் சிகிச்சைப் பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். (ம-3)

## சிதம்பர தரிசனம்

ஈழத்துச் சிதம்பரத்தில் (2020.12.26) திருவெம்பாவை 6ஆம் நாள்.

### சுந்தரேசன் சௌந்தராவுடன் அசைவதை ஆரறிவார்

காரூரும் சோலைகளும் கவினூறும் காட்சிகளும்
நீரூறும் திண்ணக் களியில் நிதமுயரும் புதுவாழ்வும்
ஆறூறும் பேரழகும் கசூரினாவின் எழில் வனப்பும்
ஏரூந்து நெல்விளைக்கும் எழிலார்ந்த களனிகளும்
தேரூரும் அகவத் திருவீதிகளில் எழில்பொழியும்
பேரூரில் சுந்தரேசன் சௌந்தராவுடன் அசையும் தனியழகை
ஆரறிவார் அவனருள் இல்லையெனில் அறியாதார்

செந்நாப்புலவர் மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ஞானம்- ஒரு சுமையாக

ஞானம் ஒரு சுமை, களங்கமில்லா மனத்தை இழக்கச் செய்யும் போது

ஞானம் ஒரு சுமை, வாழ்வோடு அது இணையாத போது

ஞானம் ஒரு சுமை, அது மகிழ்ச்சியளிக்காத போது

ஞானம் ஒரு சுமை, நீங்கள் அறிவாளி என்னும் எண்ணத்தை அது உங்களுக்குத் தரும் போது

ஞானம் ஒரு சுமை, உங்களுக்கு அது விடுதலை உணர்வைத் தராத போது

ஞானம் ஒரு சுமை, நீங்கள் தனிச்சிறப்புடையவர் எனும் உணர்வு உங்களுக்குள் தோன்றும் போது.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

மாநில ஆளுநரைக் காண அவருடைய அரசு பவனத்துக்குப் போகும் ஒருவன் வாசலில் நிற்கும் பணியாளர்களையா அதிகம் மரியாதை செலுத்தி வணங்குவான். அது போல் ஆலயத்தில் இறைவனுக்குத்தான் முதல் வணக்கம் செலுத்த வேண்டும். வழிபாடு முடிந்த பின் நவக்கிரகங்களை வலம் வந்து கும்பிட வேண்டும். (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** கலட்டி, நாச்சிமார் கோவில் கே.கே.எஸ்.வீதியிலிருந்து சிவன் கோவில் கே.கே.எஸ். வீதி வரை, அரசடி வீதி, பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, சிவன் பண்ணை வீதி, மானிப்பாய் வீதி, இராமநாதன். வீதி, ஹரிகணன் அச்சகம், எவகிறீன் அச்சகம், **Annamalaian Sri Ragaventhirar Enter Prises** ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஐயப்ப பக்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விதிகள்

❖ பக்தர்கள் கார்த்திகை முதல் நாள் மாலையணிவது சாலச்சிறந்தது.

❖ இதன்போது நாள், கிழமை பார்க்க வேண்டியது இல்லை. குறைந்த பட்சம் 41 நாட்கள் விரதம் மேற்கொண்டுதான் சபரிமலை யாத்திரையைத் தொடங்க வேண்டும்.

❖ துளசிமணி அல்லது உருத்திராட்சை மாலை 108 அல்லது 54 மணிகள் உள்ளதாகப் பார்த்து வாங்கி அத்துடன் ஐயப்ப திருவுருவப் பதக்கம் ஒன்றினை இணைத்து பலமுறை முறையாக விரதம் இருந்து பெருவழிப் பாதையில் சென்று வந்த பழமலை ஐயப்பன்மார் ஒருவரை குருவாக ஏற்று திருவிளக்கு முன்பாகவோ, திருக்கோயில்களிலோ குருநாதரை வணங்கி அவர் தம் திருக்கரங்களால் மாலையணிந்து கொள்ள வேண்டும்.


❖ மாலையணிந்து கொண்டவுடன் குருநாதருக்கு தங்களால் இயன்ற குரு தட்சணையை கொடுத்து அடிவணங்கி ஆசிபெற வேண்டும். (தொடரும்)

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## 27.12.2020 முதல் 20.12.2023 வரை

# மகரத்தில் வருகிறது சனி; மகத்தான பலன் கிடைக்கும் இனி!

## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**மேஷ இராசி நேயர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் இன்று 26 ஆம் திகதி முதல் 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கின்றார். உங்கள் இராசிக்கு 10, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. தொழில் மற்றும் இலாப ஸ்தானத்திற்கு அதிபதியான சனி பகவான், தொழில் ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கப்போவது யோகம்தான். இதனால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். மகர இராசியில், ஏற்கனவே நீச்சம் பெற்ற குரு இருக்கின்றார். அவரோடு இப்பொழுது சனியும் சேருவதால் 'நீச்ச பங்க இராஜ யோகம்' ஏற்படுகின்றது. எனவே சனியால் மிகுந்த நற்பலன்கள் கிடைக்க, குருவின் அனுகூலமும் கைகொடுக்கும்.

**தொழிலில் பணவரவு கூடும்**

டிசெம்பர் 26 ஆம் திகதி முதல் உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்திற்கு வரும் சனி பகவானால் தொழில் வளர்ச்சி சிறப்பாக அமையும். கிள்ளிக்கொடுக்காமல் அள்ளிக்கொடுக்கும் ஆற்றல் சனி பகவானுக்கு உண்டு.

எனவே தொழிலில் இலாபத்தை அள்ளிக்கொடுப்பார். தொல்லை தந்த எதிரிகளின் பலம் குறையும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அலுவலகத்தில் ஏற்பட்ட அல்லல்கள் அகலும்.

**சனியின் பார்வை பலன்கள்**

உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனியின் பார்வை 4, 7, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. அதன்படி பூமி, சுகம், தாய், கல்வி, வியாபாரம், களத்திரம், பயணம், விரயம் ஆகியவற்றைக் குறிக்கும் 4 ஆம் இடத்தில், சனியின் பார்வை பதிவதால் ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படலாம்.

ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவது நல்லது. சனியின் பார்வை 7 ஆம் இடத்தில் பதிவதால் கல்யாண வாய்ப்புகள் கைகூடிவரும். ஏற்கனவே பேசி கைவிடப்பட்ட வரன்கள், மீண்டும் தேடிவரலாம். உத்தியோகத்தில் பணிநிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரும்.

உறவினர்களோடு மனம் விட்டுப் பேசி சில பிரச்சினைகளுக்கு நல்ல முடிவெடுப்பீர்கள். சனியின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால் பயணங்கள் அதிகரிக்கும். இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் வரலாம்.

**சனியின் பாதசாரப் பலன்கள்**

27.12.2020 முதல் 27.12.2021 வரை: சூரியன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும்பொழுது, பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய வாய்ப்புகள் வந்துசேரும். சூரியன் 5 ஆம் இடத்திற்கு அதிபதியானவர். அவரது சாரத்தில் சனி சஞ்சரிக்கும்பொழுது, பொதுவாழ்வில் புகழ்கூடும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.




28.12.2021 முதல் 26.01.2023 வரை: சந்திரன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும். உங்கள் இராசிக்கு சுக ஸ்தான த்திற்கு அதிபதியானவர் சந்திரன். எனவே இக்காலத்தில் இடம், வீடு வாங்கும் யோகம் உண்டு.

27.01.2023 முதல் 19.12.2023 வரை: செவ்வாய் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் போது, இராசிநாதன் காலில் சனி உலா வருவதால் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துவது நல்லது. இடையில் கும்ப இராசியிலும் சனி சஞ்சரிக்கின்றார். எனவே சுபவிரயங்கள் அதிகரிக்கும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

சனிப்பெயர்ச்சி காலத்தில் மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெற இருக்கின்றது. கும்பத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, இலாப ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே பொருளாதார வளர்ச்சி சிறப்பாக இருக்கும். தொழிலில் மேன்மை உண்டாகும். லாபமும் கிடைக்கும்.

மீனத்தில் குரு சஞ்சரிக்கும்பொழுது, விரயங்கள் கொஞ்சம் அதிகரிக்கலாம். உறவினர்கள் பகை உருவாகலாம். மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, ஜென்ம குருவாக வருவதால் இடமாற்றங்களும், ஊர்மாற்றங்களும் ஏற்படலாம்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்**

21.03.2022 இல் ராகு-கேது பெயர்ச்சியாகும்போது, மேஷத்தில் இராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். அதன்படி உங்கள் இராசிக்கு, ஜென்மத்தில் ராகுவும் சப்தம ஸ்தானத்தில் கேதுவும் வருவதால் குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கக்கூடும். கூட்டாளிகளிடம் விழிப்புணர்ச்சி தேவை.

வாழ்க்கைத் துணை வழியே விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. 08.10.2023 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின் போது, மீனத்தில் ராகுவும் கன்னியில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். அந்த நேரத்தில் நீங்கள் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். தெய்வீக சிந்தனை அதிகரிக்கும். சிக்கல்களில் இருந்தும், சிரமங்களில் இருந்தும் விடுபடுவீர்கள்.

**வெற்றிக்குரிய வழிபாடு**

சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனி பகவானுக்குரிய 'கருநிறக் காகம் ஏறி..' என்ற சனி கவசப் பாடலைப் பாடி வழிபடுங்கள். அதோடு ஆதியந்தப் பிரபு படத்தை இல்லத்து பூஜை அறையில் வைத்து அருகம்புல் மாலையும் வெற்றிலை மாலையும் அணிவித்து வழிபட்டால் வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும்.

**சனியின் வக்கிர காலம்**

12.05.2021 முதல் 26.09.2021 வரை, 25.05.2022 முதல் 09.10.2022 வரை, 27.06.2023 முதல் 23.10. 2023 வரை என மூன்று முறை சனி பகவான் வக்கிரமடைகின்றார்.

தொழில் மற்றும் இலாப ஸ்தானத்திற்கு அதிபதி வக்கிரமடைவது அவ்வளவு நல்லதல்ல. மிகுந்த கவனம் தேவை. எதிரிகள் பலம் கூடும். பிறருக்கு பொறுப்புகள் சொல்வதால் பிரச்சினைகள் உருவாகும்.

விரயம் உண்டு. தைரியமும் தன்னம்பிக்கையும் தெய்வ பலமும் உங்களுக்கு கைகொடுத்து உதவும். எதையும் யோசித்து முடிவெடுப்பது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**



இந்த சனிப்பெயர்ச்சி, எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் பெயர்ச்சியாக அமையப்போகின்றது. பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். கணவன்- மனைவி ஒற்றுமை பலப்படும்.

பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். மங்கல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். உடன் பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக்கொடுப்பர்.

பணிபுரியும் பெண்களின் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். சனியின் வக்கிர காலத்தில் உங்கள் ஆரோக்கியத்திலும் பெற்றோர்களின் ஆரோக்கியத்திலும் கவனம் தேவை. அரசு வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அது கை கூடும்.

(தொடரும்)

## சுனாமி நினை...

பின்பற்றி நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த 2004ஆம் ஆண்டு பாதிப்பை ஏற்படுத்திய ஆழிப்பேரலை சுனாமி இயற்கை அனர்த்தத்தினால் காவு கொள்ளப்பட்டோரின் 16ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று இடம்பெறவுள்ள நிலையில் தற்போது உள்ள கொரோனா பரவல் அச்சநிலையை கருத்தில் கொண்டு சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றி சுகாதார வைத்திய அதிகாரியின் அனுமதியுடன் குறித்த நினைவேந்தல் நிகழ்வுகளை மட்டுப்படுத்தப்பட்டளவில் நடத்த முடியும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (ம-3)

## குளத்தில் மூழ்கிய...

லாக மூவர் நேற்று மதியம் கல்மடுகுளத்திற்கு சென்றுள்ளனர்.

இதன்போது குறித்த இளைஞன் குளத்திற்குள் இறங்கியபோதே மூழ்கி மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் கல்மடுநகர் சம்புக்குளத்தைச் சேர்ந்த 27 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை யான இரத்தினம் லோகிதன் என்பவரே இச்சம்பவத்தில் மரணமடைந்துள்ளார். (ம-3,100,312,315,316,350)

## பெண்...

நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண் கடந்த இரு தினங்களிற்கு முன்பாக வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு பிசிஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டு அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

பரிசோதனை முடிவுகளின் பிரகாரம் அவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. (ம-3,250,299)

## மீசாலையில்...

கொடிகாமம், இராமாவில் பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய ஜயாத்துரை மோகனதாஸ் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இனந்தெரியாத நபர்களால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

அவரது கையில் ஒரு காயமும் நெஞ்சில் ஆழமான கத்திக்குத்துக் காயமும் ஏற்பட்டுள்ளது.

கூலித் தொழிலாளியான குறித்த குடும்பஸ்தர் துவிச்சக்கரவண்டியில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்தபோதே கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள அதேவேளை சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது (ம-3,30)

## புதிய பிரேரணை...

நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமர்வை முன்னிலைப்படுத்தி இங்கு எதிர்க்கட்சியினர் தமது சுயலாப அரசியல் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட ஜெனிவாத் தீர்மானங்களிற்கான இணை அனுசரணையில் இருந்து எமது அரசு வெளியேறி விட்டது.

எனவே இம்முறை எமது நாடு மீது புதிய பிரேரணை கொண்டுவரப்பட்டாலும் அதையும் வலுவிழக்கச் செய்வோம். எதிர்க்கட்சியினரின் ஜெனிவாப் பரப்புரை தொடர்பில் நாம் அலட்டிக் கொள்ளக் கூடாது என்றார்.

கொரோனாவை ஒழிப்பதில் தேசிய செயற்பாட்டு மையத்தினர் முழுமூச்சுடன் செயல்பட்டு வருகின்றனர்.

முழு நாட்டையும் முடக்கி நாட்டு மக்களின் வயிற்றில் அடிக்காமல் தொற்று பரவும் அபாயமுள்ள பகுதிகளை அடையாளம் கண்டு அந்தப் பகுதிகளை முடக்கி, தொற்றை படிப்படியாக குறைத்து வருகின்றனர்.

பிரிட்டனில் பரவும் புதிய வைரஸ், இலங்கையிலும் பரவக் கூடாது என்பதற்காகவே பிரிட்டனில் இருந்து இங்கு பயணிகள் வருவதை தற்காலிகமாக தடை செய்துள்ளோம்.

அதேவேளை, வெளிநாடுகளிலிருந்து தடுப்பூசியை இலங்கைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே 2021இன் ஆரம்பத்திலேயே இலங்கையில் கொரோனாவிற்கு முடிவு கட்டிவிடலாம் என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும் என்றார். (ம-3)

## வெளிநாடுகளில்...

ஹேவா தெரிவித்துள்ளார்.

இதற்கான நடைமுறைத் திட்டத்தை வகுப்பதற்காக பாராளுமன்ற தேர்தல் தெரிவு குழுவைக் நியமிப்பதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உடன்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர்,

வாக்காளர்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் பொழுது பெரும்பாலானவர்களுக்கு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. விசேடமாக வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு சட்டரீதியில் தேர்தலில் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் கிட்டவில்லை.

இதேபோன்று இலங்கைக்குள் ஊடகவியலாளர்கள், அத்தியாவசிய சேவையில் ஈடுப்பட்டுள்ளோர், சுகாதார பிரிவை சேர்ந்தவர்கள் நாளந்தம் தமது கடமைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் இவ்வாறானோருக்கு தபால் மூலம் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பமும் இல்லை. சிறைச்சாலையில் உள்ளவர்களுக்கும் இதே நிலையே.

வாக்களிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காதவர்களுக்கு வாக்களிப்பு இடம்பெறும் தினத்திற்கு முதல் நாள் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுப்பது தொடர்பில் தற்பொழுது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வாக்களிப்பதற்காக சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தற்பொழுது சில திருத்தங்கள் தொடர்பில் நாம் நடவடிக்கை மேற் கொண்டுள்ளோம்.

தயாரிக்கப்பட்டுள்ள திருத்த சட்டங்களை சட்டமாக்குவதற்காக பாராளுமன்ற தெரிவுக் குழுவை அமைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பிரதமர் உடன்பட்டுள்ளார். இந்த தெரிவுக்குழுவின் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகும் என்றார். (ம-3)

## நாட்டில் கோவிட்...

டில் கோவிட்-19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 186 ஆக உயர்வடைந்துள்ளது.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த 54 வயதுடைய ஆண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

அத்துடன் நாட்டில் நேற்று 551 பேர் கோவிட் - 19 நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 39 ஆயிரத்து 782 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## உலர்...

தப்பட்டுள்ளன.

நாவாந்துறை ஜே86 கிராமசேவகர் பிரிவிலேயே மேற்படி 30 குடும்பங்கள் நேற்று தொடக்கம் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

குறித்த பகுதியில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு உதவி வழங்க வந்த நபர் ஒருவருக்கு கடந்த புதன் கிழமை கிளிநொச்சியில் கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ள நிலையில் சுகாதார பிரிவினர் இந்த நடவடிக்கையினை எடுத்திருக்கின்றனர்.

இந்நிலையில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு இன்று பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்படவுள்ளது. (ம-3)

## கனடா செல்ல...

சீட்டை பயன்படுத்தி ஐக்கிய அரபு எமிரேட்ஸின் டுபாய் வழியாக கனடாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற குற்றச்சாட்டுக்காக யுவதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த யுவதியை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் நேற்று காலை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 22 வயதுடைய யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்தவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.(ம-3)

## உடுவிலில்...

பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 124 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில், உடுவில் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம்மருதனார்மடம்கொரோனா கொத்தணியின் மொத்த எண்ணிக்கை 105 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,18)


மெகா பவர்
திகதி 25/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0714
வெற்றி இலக்கங்கள்: K 07 11 31 75 79

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/12/25
சீட்டிழுப்பு இலக்கம் 1560
சுப்பர் இலக்கம் 06
வெற்றி இலக்கங்கள் 04 31 44 59
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/12/25
சீட்டிழுப்பு இலக்கம் 4347
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்: P 1 9 8 6 2 2
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 25.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2642
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்: V 03 25 34 60
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2020.12.25
சீட்டிழுப்பு இலக்கம் - 384
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்: X 04 62 75 76

அத கோடிபதி
தினம்: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 1143
சீட்டிழுப்பு திகதி: 25.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 93,413,310
வெற்றி இலக்கங்கள்: 17 49 53 59 U
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
தினம்: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 3473
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 25.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 37,523,331
வெற்றி இலக்கங்கள்: 19 31 32 75 Q
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,839,391/=
வெற்றி இலக்கங்கள்: 05 17 33 59
மீனம்
திகதி: 25.12.2020
வெற்றி வாரம்: 3024
வர்ணம்: கடும் நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,727,640

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1317
நிறம் இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 25/12/2020
தினம் வெள்ளி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: Y 01 22 26 27
அடுத்த சுப்பர் ஜக்பொட் 59,810,466

சீட்டிழுப்பு வாரம் 668
25.12 2020
வெள்ளி
M 09 33 55 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,612,855
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

# போதைப்பொருள் வலையமைப்பை அடுத்த வருடத்தில் கட்டுப்படுத்துவோம்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாதாள உலக நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடுவர்கள் மீது அதிகபட்ச சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமால் குணரத்ன எச்சரித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் சட்டவிரோத போதைப்பொருள்வலையமைப்பை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் அடுத்த ஆண்டில் மேலும் பலப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் - ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் பதிலளித்த அவர்,

பொது மக்களால் இரகசியமாக தெரிவிக்கப்பட்டு வரும் தகவல் மூலமாக சட்டவிரோத போதைப் பொருட்கள் கைப்பற்றப்படுவதனால் சமீபத்தில் போதைப் பொருட்களின் இருப்பு குறைந்து வருகின்றது.

இதன் காரணமாக அவற்றின் விலைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

பாதாள உலக மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் ஒரே குழுக்களினால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

போதைப் பொருள் மூலம் சட்டவிரோதமாக சம்பாதிக்கப்பட்ட 59 மில்லியன் ரூபா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை சிறைச்சாலைகளில் இடப்பற்றாக்குறை நிலவுகின்றபோதிலும், நாம் கடந்த காலங்களில் பாதாள உலக மற்றும் போதை பொருள் கடத்தலுக்கு எதிராக தொடங்கிய போராட்டத்தை நிறுத்தவில்லை என்றார். (ம-03)

## 1 இலட்சம் காணி வழங்கும் திட்டம்

# யாழில் காணி கோரியவர்களுக்கு விரைவில் நேர்முகத் தேர்வுக்கு முடிவு

(கொழும்பு)

ஒரு இலட்சம் காணி வழங்கும் திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் காணி கோரியவர்களின் விண்ணப்பங்களை ஆராய்ந்து நேர்முகத் தேர்வினை நடத்தி பட்டியலப்படுத்தி முன்னுரிமை தேவையாளர்களை அடையாளம் காண்பது குறித்த கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றிருக்கின்றது.

குறித்த திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் மட்டும் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 500 பேர் விண்ணப்பம் செய்துள்ளனர். மேற்படி கலந்துரையாடலில் பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அவற்றிற்கு அமைய தற்போது விண்ணப்பித்தவர்களில் ஒரு ஏக்கருக்கும் குறைவாக விண்ணப்பித்தவர்களிற்கும் வதிவிட பிரதேச செயலாளர் பிரிவிற்குள் காணி கோரியவர்களிற்கே முதலில் நேர்முகத் தேர்வினை நடத்தி தகுதியானவர்களை இனம் கண்டு பட்டியலிடுவதோடு அடுத்த கட்டமாக எஞ்சியவர்களிற்கான நேர்முகத் தேர்வினை நடத்துதல்.

காணிகோரி விண்ணப்பித்தவர் வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவிலேயே நேர்முகத் தேர்வினை நடத்துவதன் மூலமே விண்ணப்பதாரிக்கு வேறு நிலம், முயற்சிநிலைமை தொடர்பான விபரங்களை உறுதிப்படுத்த முடியும் என்பதனால் வசிக்கும் பிரதேச செயலகத்திலேயே நேர்முகத் தேர்வினை நடத்துதல். ஒரே குடும்பத்தில் எத்தனைபேர் விண்ணப்பித்திருப்பினும் முதல் கட்டமாக ஒருவருக்கு மட்டுமே சிபார்சு செய்தல். போன்ற தீர்மானங்கள் மாவட்டச் செயலாளர் தலைமையில் எட்டப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில், காணி ஆணையாளர், உள்ளூராட்சி ஆணையாளர், தெங்கு அபிவிருத்திச் சபை என பல திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ம-03)

# பிரதேச செயலர்களுக்கு இடமாற்றம் அறிவிப்பு

(முறிகண்டி)

பூநகரி, பச்சிலைப்பள்ளி மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர்களுக்கு இடமாற்ற அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச செயலராக செயற்பட்டு வரும் எஸ்.கிருஸ்ணேந்திரனை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலராகவும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலராக கடமையாற்றி வந்த பரமோதயான் ஜெயராணி ஒட்டுசுட் டான் பிரதேச செயலராகவும், ஒட்டுசுட்டான பிரதேச செயலகத்திற்கு முதலாவது பிரதேச செயலாக பொறுப் பேற்று கடமையாற்றி வரும் த.அகிலன் பூநகரி பிரதேச செயலராகவும் இடமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இவ் இடமாற்றமானது எதிர் வரும் மார்ச் மாதம் முதல் நடைமுறைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03.100)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**வேலைக்கு ஆள் தேவை**
பொது வேலைக்கு (ஆண் / பெண்)
ஒருவர் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.
தொடர்பு நேரம் : 9.00 a.m - 12.00 p.m
1.00 p.m - 3.00 p.m (C-988)
**076 714 8059**

**பணிப் பெண் தேவை**
யாழ். திருநெல்வேலிப் பகுதியில் வசிக்கும் குடும்பம் ஒன்றிற்கு பகலில் சமையல் மற்றும் இதர வேலைகளைச் செய்யக்கூடிய பணிப் பெண் தேவை.
அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
**077 313 3043**

**வகுப்பு**
German, Swiss செல்பவர்களுக்கான டொச் வகுப்புக்கள் மற்றும் A1 பரீட்சைக்குரிய இலகுவான வழிகாட்டலும் மற்றும் Personal Class களும் கற்பித்துக் கொடுக்கப்படும். (C-1019)
**தொடர்பு : 076 401 8564**

**சர்வதேச விரைவு பொதிகள் சேவை**
**முகவர்கள் தேவை**
வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் முல்லைத்தீவு, முள்ளியவளை, மண்டைதீவு வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு எழுவைதீவு, குறிகட்டுவான், ஊர்காவற்றுறை போன்ற இடங்களில் இருந்து வெளிநாடுகளுக்கு பொதிகள் அனுப்பும் சேவைக்கு தகுதியான முகவர்களை எதிர்பார்க்கின்றோம்.
**VEX COURIER**
(V2 TRAVELS) (C-1024)
**0768226244**

**வேலை வாய்ப்பு**
அலுவலக செய்தியாளர்கள்
ஆண்கள்
பகல், இரவு கடமை
**தகைமை**
- க.பொ. த உயர்தரம் கற்றிருத்தல்.
- 25 - 45 வயதிற்கு இடைப்பட்டவர்கள்.
- யாழ். நகரத்தில் இருந்து 6 Km தூரத்திற்குள் வசிப்பவர்கள்.

**தொடர்பு**
**076 097 3121**
பொது முகாமையாளர்
வலம்புரி

**அன்னா விரைவுப் பொதிகள் சேவை**
பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1150/=
5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு (C-981)
லண்டன் 1050/= இத்தாலி 1250/=
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)
பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது
எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்
070 330 5500 077 888 9388 075 330 5500
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | கனகராயன்குளம் மல்லாவி துணுக்காய்

**விரைவு பொதிகள் சேவை**
**V2 TRAVELS**
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-962)
**0768226240** DHL

**VACANCY**
உடனடி வேலை வாய்ப்பு
- Hardware Technician
- Web Developer
- Software Developer
- Media Work
- Marketing
- Data Entry

இன்று முதல் நேர்முகத் தேர்வு இடம்பெறும். (5065)
51, AMMAN ROAD, NALLUR, JAFFNA.
E-mail : dewmasjaffna@gmail.com
Tel : 021 315 2500, 075 022 6733
Call, Viber, WhatApp : 074 138 3368

**கடை வாடகைக்கு**
யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் ( செலான் வங்கிக்கு முன்பாக ) அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டடம் ( 2,000 சதுர அடி ) வாடகைக்கு உண்டு. (5063)
தொடர்பு
**077 115 4005**
**077 712 0945**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.